அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page_No-1

மலர்: 9 இதழ்: 1 விலை 25 ந.பை.	ஹேவிளம்பி ௵ சித்திரை மீ ஏப்ரல்—மே '57	வருட சந்தா ரூ. 2-4-0

18582



பாண்டியர் வெப்பகல திருஞானசம்பந்தர்
பதிகம் பாடி திருநீறு பூசுகிருர்
பெரியபுராணச் சித்திர விளக்கம் 37; பக்கம்-42

2

பொருளடக்கம்

		பக்கம்
1. குருதத்துவம்	(திருப்புகழ் மணி) ...	1
2. இழந்த நலம்	(கி. வா. ஜகந்நாதன்) ...	7
3. திருப்புகழ் விரிவுரை	(குகஸ்ரீ) ...	11
4. சீதை அருள்வடிவம்	(அ. கி. ரங்கராஜன்) ...	14
5. கீதை காட்டும் பாதை	(அ. ராமமூர்த்தி) ...	19
6. ஞானதாகம்	(அன்பன்) ...	22
7. பக்தி	(சி. குமாரஸ்வாமி) ...	24
8. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்	S. T. இராமலிங்கம்பிள்ளை) ...	26
9. அபிராமி பட்டர்	(ரஸபதி) ...	32
10. பாண்டியன் வெப்பு நீங்கல்	(கி. வா. ஜ.) ...	42
11, The Veena of life	*(Thiruppugal Mani)* ...	47

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினல், சித்திரைமீ" முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

R011-78 3 1-624
1138-18582

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 9	ஹேவிளம்பி ஹூ சித்திரை மீ ஏப்ரல் - மே—57	இதழ் 1

18582

குருதத்வம்

(திருப்புகழ் மணி)

குரு ப்ரம்ம! குரு விஷ்ணு! குருதேவோ மஹேஸ்வர!
குரு சாக்ஷாத் பரப்ரம்ம! தஸ்மைஸ்ரீ குரவே நம!

ப்ரம்மா, விஷ்ணு, சிவம் என்ற திருமூர்த்திகளும் பரப்ரம்மம் என்று சொல்லப்பட்ட முழுமுதற் கடவுளும் லோகத்திற்குக் குருவே ஆவார்கள். கடவுள் ஒன்றே என்று உபநிஷத்துக்கள் கூறும். அந்தக் கடவுள் அநேக ரூபங்களாக அவதரித்து ஆங்காங்கே ஜீவராசிகளை ரக்ஷித்து வருகின்றது. இதற்குக் காரணம் கடவுளின் பண்பு கருணை அல்லது ப்ரேமையாதலால் தான். குருவும் கடவுளும் வேறன்று. 'விஷ்ணுமயம் ஜகத்' 'சிவமயம் ஜகத்' 'மாதாமயம் ஜகத்' 'குகமயம் ஜகத்' என்ற வாக்கியங்கள் எல்லாம், தெய்வம் உலகம் முற்றிலும் பரந்து நிற்கும் தன்மையை அறிவுறுத்துகின்றது. சிவ, விஷ்ணு, ப்ரம்மாவெல்லாம் குருமயம் ஆதலின், குருமயம் ஜகத் என்ற பொருள் வெளி

அருளுருவாய் ஆநந்த அற்புத அகோசரமாய்
பொருள் பலவாய் நின்ற புனிதா அடைக்கலமே

யாகும். ஆகவே "ஜகத்குரு" என்ற வாக்கியம், உலகத்தில் ஒரே ஒரு குரு தத்துவம்தான் இருக்கின்றது என்றும், அந்தக் குரு தத்துவம் அநேக ரூபங்களாய் வெளிப்படினும் ரூப பேதமேயன்றி பொருள் பேதமில்லையென்று விளங்கும். ஆகையால் தாயுமானவர் பாடியது மிகவும் போற்றத் தக்கது.

"மைவிடாது எழு நீல கண்ட குருவே
விஷ்ணு வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கள்தொறும் நின்ற குருவே
கைவிடாதே யென்ற அன்பர்க்கு அன்பாய்
அவர் அறிவூ டுணர்த்து குருவே!
கருதரிய சித் சபையில் ஆனந்த நிர்த்த
மிடும் கருணாகரக் கடவுளே"

என்று பாடினார்.

ஆகையால் திரிமூர்த்திகளாயும் அப்பாலுமாயும் தெய்வம் உணர்த்துங்கால், குருமுகமாக காணப்படுகின்றது. இந்த உண்மையைக் குரு லக்ஷணங்கள் கூறிவிடுகின்றன.

"நித்யானந்தம் பரமஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்
விஸ்வாதீதம் ககனசதர்ஸம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம்
ஏகம் நித்யம் விமலம் அசலம் ஸர்வதீ சாக்ஷிபூதம்
பாவாதீதம் த்ருகுண ரகிதம் சத்குருந்தம் நமாமி"

இந்தத் தெய்வீகக் குணங்கள் வேறல்ல; தெய்வம் வேறல்ல. சத்குருவும் வேறல்ல. ஜகன்மாதாவை குருவாய் அடைகின்றார்.

குருஸ்த்வம் சிவஸ்த்வம் சக்திஸ்துவமேவ
த்வமே வாஸிமாதா பிதா சத்வமேவ
த்வமே வாஸிவித்யா த்வமே வாஸி பந்துர்
கதிர்மே மதிர்தேவி ஸர்வம் த்வமேவ"

அண்டமொடு பிண்டமுமாய் அடங்காத தூவெளியாய்க்
கண்டதுகேட் டல்லதுமாய்க் காண்பாய்க் கடைக்கணமே

ஸ்ரீ வித்யா பாவமாக ஆதி அத்வைதப் பொருளைப் பணிகின்ற காலத்தில் ஆதிசங்கரர் சொன்ன வாக்கியம் உலகம் மறக்க முடியுமா?

"ஸ்ரீவித்யே! சிவவாம பாகநிலயே!
ஸ்ரீ ராஜ ராஜார்ச்சிதே!
ஸ்ரீ நாதாதி குருஸ்வரூப விபவே
சிந்தாமணி பீடிகே"

என்றார். எங்கும் பரந்து நிற்கும் ப்ரம்ம தத்வம், சில சில இடங்களில் நல்ல வாய்ப்பு கிடைத்த பக்தர்களுக்கு வெளிப்படையாகக் காணப்படுகின்றது. இவ்வித இடங்களில் ஒரு முக்கியமான இடம் இப்பொழுது 50 வருஷமாக விளங்கும் காமகோடி பீட ஆசார்யாள், ப்ரம்மமாக விளங்குவதுதான். குரு தத்வமாதலால் எல்லா அவதாரங்களும் குருவாகப் பாவிக்கப்படுகின்றனர். ஓர் பெரிய ராம பக்தர் ராமனே குருவென்றார்.

"நீயதேது நானதேது நடுவில் நின்ற தேதடா
கோனதேது குருவதேது கூறிடுங் குலாமரே

....

..........ராம ராம வென்னும் நாமமே"

க்ருஷ்ணனே ஜகத்குருவாகக் கண்டார் ஒரு பக்தர்.

"வஸுதேவ ஸுதம் தேவம்
கம்ஸ சாணூர மர்த்தனம்
தேவகீ *பரமானந்தம்*
க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்"

இது எட்டு ஸ்லோகங்களில் ஒன்று.

ஸ்ரீக்ருஷ்ண பகவானை அர்ச்சுனன் தன் குருவாகப் பார்க்கின்றான்.

ஒன்றிரண்டாய்ப் பின்பலவாய் உயிராய் உயிர்க்குயிராய்
நின்றகிலாண் டங்களுமாய் நிற்பாய்க் கடைக்கலமே

*"பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யஸ்ய
குருஹி கரீயான்........."*

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாக ஆதியில் சிவன் அவதரித்தார்.

*"மௌன வுபதேச சம்பு
மதியருகு வேணி தும்பை
மணிமுடியின் மீதணிந்த மகதேவர்
மனமகிழ வேயணைந்து
ஒருபுறம தாக வந்த
மலைமகள் குமார துங்க வடிவேலா!*

என்றும்,

குருவாய் அரற்கு உபதேசம் வைத்த குகனே"

என்றும் திருப்புகழில் பாடினார்.

*"மௌன வ்யாக்யா ப்ரகடித பரப்ரம்ம
தத்வம் யுவானம்
வர்சிஷ்டாந்தே வஸது ரிஷிகணை
ஆவ்ருதம் ப்ரம்ம நிஷ்டை ஹி
ஆசார்யேந்த்ரம் கரகலித சின்முத்ர
ஆனந்த மூர்த்திம்
ஸ்வாத்மா ராமம் முதித வதனம்
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மீடே"*

என்ற இந்தப் பழைய ஸ்லோகத்தாலும் விளங்கும்.

பிறகு சங்கராசார்ய ரூபமாய் சஞ்சரிக்கின்றார்.

*அஞ்ஞானாந்தர் ககனபதிதான் ஆத்ம வித்யோப தேசைஹி
த்ராதும் லோகான் பவதவ சிகாதாப பாபச்சிய மானன்
முக்த்வா மௌனம் வடவிடபினோ மூலதோ நிஷ்பதந்தி
சம்போர் மூர்த்திச் சரதி புவனே ஸ்ரீசங்கராசார்ய ரூபா"*

மாமா கீதோபதேச குருவாய் விளங்குகிறார். மருகன் ப்ரணவோபதேச குருவாய் விளங்குகிறார்.

இச்சைமுத லானசத்திக்(கு) ஏற்ப இடம் காட்டி
உச்சிநடு வீடேறி உறைவாய்க் கடைக்கலமே

"சிவனுர் மனம்குளிர உபதேச மந்த்ரமிரு
செவி மீதிலும் பகர்செய் குருநாதா"

என்று அருணகிரியார் போற்றுகின்ருர்.

"திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடிவான வதனங்க ளாறும் மலர்க் கண்களும்
குருவடிவாய் வந்து என்னுள்ளம் குளிரக் குதி
[கொண்டவே"

என்பது கந்தரலங்காரம்.

உலகேழும் தாஞகக் கொண்டு, எனதும் யானும் வேருக, யாவரும் எவையும் தாஞக, இதயபாவஞதீத பெரியோர்கள், ஜகத்தைத் தன்னுள் உணர்ந்து, ஜகத்தின் பாவ புண்ணியங்களைத் தன் பரவ புண்ணியங்களாகக் கருதி, அவைகளினின்றும் ஜகத்தை மீட்டுத் தாரகம் செய்யும் பெரியோர் யார்? அவர்கள்தானே ஜகத்குரு. என்ன மேன்மை! அத்வைத பாவத்துக்கு உகந்த உண்மை!

ப்ரம்ம ஞானி ஆவடையக்காள் பேணுவதும் மிகவும் பொருத்தம்.

சீர்பெருகும் சச்சித் ஆனந்த தேசிக
சின்மயனே குருநாதா
பார் முழுதும் பரமாகி நிறைந்திட
பாக்கியமே குருநாதா
யார் தருவார் எனக்கு அருளினுல்
அநுபவம் ஆள்பவனே குருநாதா
பேரறிவாகிய ப்ரம்ம நிலைகண்டு
பேசறியேன் குருநாதா!

....

நித்த நிரஞ்சன நிர்மலமாகிய
நிற்குணனே குருநாதா

அயன்மால் அரன்வடிவாய் ஆதிபர தெய்வமுமாய்
நியமாக மங்களுமாய் நிறைந்தாய்க் கடைக்கலமே

சத்திய ஞான அனந்தமுமாகிய
சாஸ்வதமே குருநாதா!"

இந்த மகிமையைப் போற்றி, பேசி, அநுபவிக்கும் இடமாகி, சென்ற 50 வருஷ காலமாய் ஸ்ரீ காமகோடி பீடத்தில் விளங்கும் ஸ்ரீ சங்கராசார்யர், யார் மனத்தைத்தான் கவராார்கள். உலகெலாம், மதங்கள்தோறும், மானிடம் தோறும், எல்லா உயிர்கள் தோறும் நின்றிலங்கும் பேரானந்த குருதத்துவம் விளங்கும் ஓர் இடமாகக் கருதித் தலைவணங்கி வாழ்த்துவோம். இந்தப் பரந்த பாவத்திலே, உலக சர்வ ஜீவராசிகளுக்கும் பாரபக்ஷமின்றி ஞானமெனும் ஒளியைப் புகட்டி நிற்கும் குருவை விஸ்வாஸித்தால் அடையும் பலம்தான் என்னே! ஆனந்தம்தான் என்று சொல்லுவார்.

"காயனை அகாயனுக்கி கண்டனை அகண்டனுக்கி
பேயனை ப்ரம்மமாக்கிப் பிறப்பிறப் பிலாமையாக்கி
தாயினும் இனியனுகி தகைந்தெனை ஆண்டுகொண்ட
தூய சற்குரவ! உன்னைத் தொழுந்தொறும்
[களிதுலங்கும்"

மந்திர மறையும் ஈசன்
வளரருட் டிறமும் ஓங்கச்
சந்தமார் அன்பு மேன்மேல்
தழைவுறக் காம கோடி
அந்தவப் பீடத் திந்நாள்
அமர்ந்துயர் ஞான ஆசான்
சந்திர சேக ரேந்த்ர ......
சரஸ்வதி திருத்தாள் போற்றி!

எங்கும் நிறைபொருளாய் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்த்
தங்கி அழிவின்றித் தழைப்பாய்க் கடைக்கலமே

இழந்த நலம்

(கி. வா. ஜகந்நாதன்)

பலவகைச் சல்லாப விநோதனுகிய முருகனைப் பார்த்து, "எனக்கும் உன் சல்லாப இன்பம் இப்போது கிடைக்கவேண்டும்" என்று சொல்பவரைப் போலப் பாடு கிறார். "நான் நின் அருளால் பெற்ற இன்பம் பெரிது. அதை நுகர எனக்குத் தெரிந்ததேயன்றி, அது இவ்வாறு இருந்ததென்று சொல்ல இயலவில்லை. ஒரு பொருளைப் பெற்றவனும் அதனை அவனுக்குக் கொடுத்தவனும் அதன் தன்மையை உணர்வார்கள். நின் திருவருளால் எளியேன் பெற்ற நலத்தை நீயும் நானும் அறிவோம். அதன் இயல்பை எடுத்துரைக்க என்னுல் இயலவில்லை. வேறு யாரும் அதனை உணரார். ஆதலால் அதனை எனக்கு அருளிய நீதான் அதனைச் சொல்லி யருளவேண்டும்" என்கிறார்.

அந்த நலம் இன்னவாறு இருந்தது என்று அருணகிரி நாதரால் சுட்டிக் காட்ட இயலவில்லை. யாராலும் இயலாது.

"அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே"

என்று பின்னே பாடுவார். "கண்டவர் விண்டிலர்" என்பது பழமொழி. "நின் திருவருளால் பெற்ற இன்பம் என்னுல் சொல்ல இயலவில்லை, நீ சொல்வாயாக!' என்று சொன்னுலும அவர் கருத்து அது சொல்வதற் கரியது என்பதே.

"எல்லாம் அறஎன் னைஇழந்த நலம்
சொல்லாய் முருகா"

என்ற தன் கருத்தையே அலங்காரத்தில்,

யோகம் அறியேன் சுருதி யுக்தி உணர்வறியேன்
ஊகமறியேன் என்னை உறவாக்கிக் கொள்வாயோ

"சொல்லுதற் கில்லையென் றெல்லாம்
இழந்துசும் மாஇருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட வா!"

என்று சொல்கிறார்.

அநுபவத்தை அவரால் சொல்ல முடியவில்லையே யன்றி அதற்கு முந்திய நிகழ்ச்சியை இதில் சொல்கிறார். 'எல்லாம் அற்றது' ஒரு நிகழ்ச்சி; 'என்னை இழந்தது' ஒரு நிகழ்ச்சி. இழந்தால் கஷ்டம், தீங்கு என்று சொல்வதே உலக இயல்பு. இழவு என்ற சொல் எப்படி நலமாகும்? ஆனால் இங்கே இழந்ததுவே நலமாயிற்றாம். தோற்றுப் போன வெற்றி, பறிகொடுத்த லாபம், குளிர்ந்த வெப்பம் என்று சொன்னால் எப்படி முரண்பாடோ அப்படி இதிலும் ஒரு முரண்பாடு இருப்பதாகத் தோற்றுகிறது. உண்மையில் முரண்பாடு இல்லை.

ஒரு பெரிய பாறாங்கல்லைத் தலையிலே தூக்கிவைத்து ஒருவனைச் சுமக்கச் செய்கிறார் ஒருவர். அவன் பெற்ற தண்டனை அது. எங்கோ போகையில் அந்தக் கல் விழுந்து விட்டது. அதைச் சுமத்தியவர் அதைப் பாராட்டவில்லை. அவன் கல்லை இழந்தான். ஆனால் அதுவே அவனுக்கு நன்மை அல்லவா? அது அவனுக்கு 'இழந்த நலம்.' வியாதியைப் பலகாலம் சுமந்த ஒருவன் அதை இழந்தபோது உடல் நலம் உண்டாகிறது. அதுவும் இழந்த நலம். துன்பம் தரும் ஒன்றை இழப்பது இழவாகாது; நலமேயாகும். ஆதலின் பிறவித் துன்பத்துக்குக் காரணமான இரண்டை இழந்தார் அருணகிரிநாதர்; அதனால் நலம் உண்டாயிற்று. இதில் முரண்பாடு ஏதும் இல்லை அல்லவா?

இனி அவர் இழந்தவை எவை என்பதைப் பார்க்கலாம். முதலில் 'எல்லாம்' அற்றன. பின்பு 'என்னை' இழந்தார்.

பற்றினால் ஆன்மாக்களுக்குப் பிறவியும் அந்தப் பிறவியினால் பலவகைத் துன்பங்களும் உண்டாகின்றன. பற்று அற்றால் இன்பம் கிடைக்கும்.

உன்னையே தஞ்சமென் றுள்ளபடி நம்பியுளேன்
மன்னும் பரகதியை வழங்காய் சதாசிவமே

அந்தப் பற்று இருவகைப்படும். யான், எனது என்பவை அவை. அவற்றை அகப்பற்று, புறப்பற்று என்பார்கள். வடமொழியில் அகங்காரம் மமகாரம் என்றும் வழங்கும். நான் என்று அபிமானிப்பதும் இவை என்னுடையவை என்று பற்றுவதும் அவற்றின் விளைவுகள்

நான் என்ற அகங்காரம் அடிமரமாகத் தோற்றிய பிறகு எனது என்ற மமகாரம பலவேறு கிளைகளாகவும் கொம்புகளாகவும் வளாராகவும் இலைகளாகவும் வளர்ந்து தழைக்கும். 'நான்' ஒரு பொருள், எனது, என்று சொல்பவை எல்லையில்லாத பல பொருள்கள். நான் என்பது தோன்றிப் பிறகு எனது என்பது தோன்றுகிறது.

இந்த இரண்டு பற்றும் அடங்கும்போது முதலில் எனது என்ற கிளைகள் மாயும்; அப்பால் யான் என்ற அடிமரம் மாயும். இரண்டும் மாய்ந்தால் இறையின்பம் தலைப்படும்.

யான் என்பது ஒன்று. எனது என்பது எண்ணி வரையறுக்க முடியாது. ஆதலின் அவற்றை அருணகிரிநாதர் 'எல்லாம' என்ற சொல்லால் சுருக்கமாகக் குறிப்பிட்டார். 'பல பிறவிகளிலும் ஏறிட்டுக் கொண்ட வாசனைகளும் ஆசையால் பல பொருள்களினிடம் தனித் தனியே கொண்ட பற்றும் ஆகியவும் பிறவுமாக விரிந்த மபகாரத்தின் வகைகள்' என்று அச் சொல்லுக்குப் பொருள கொள்ளவேண்டும். சுருக்கமாக உரை கூறினால் மமகாரம் என்றால் போதும்.

அகங்காரம் தோறற பின்பு மமகாரம் உண்டாதல் தோற்ற முறை. ஆடவன் பிறந்து மனைவியை மணந்து பின்பு குடும்பம் வளர்வது போன்றது அது. மமகாரம் மாயப் பின்பு அகங்காரம் அழிதல் அழியும் முறை; அல்லது இழக்கும் முறை. மேல் சட்டைகளை வாங்கிவிட்டு பிறகு உள்ளே அணிந்த பனியனை வாங்குவது போன்றது இது. ஆதலின் அருணகிரிநாதர் "எல்லாம் அற" என்று மமகார

துக்கவினை மாபாரத் துர்விஷய வியாபாரச்
சிக்கு வழக்கழிவு செய்வாய் சதாசிவமே

நீக்கத்தை முதலிலும், "என்னை இழந்த" என்று அகங்கார அழிவை அடுத்தும் வைத்தார். இவ்விரண்டு பற்றும் அழிந்தவிடத்து நலம் உண்டாயிற்றும்.

"யான்எனத் தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

என்பது திருக்குறள். இந்த இரண்டு நோயும் நீங்கிய போது உயிர் நலம் பெற்றது. அந்த நலம் சொல்ல இயலாதது.

"நின் அருளால் மமகாரம் ஒழியப் பின்பு அகங்காரம் அழிந்தது; அதனால் நான் இன்பம் பெற்றேன். அது இன்ன வாறு இருந்ததென்று எனனால் சொல்ல இயலாது. உல்லாச சல்லாபமும் வல்ல நீ சொல், பார்க்கலாம், முருகா" என்று விண்ணப்பித்துக் கொள்கிறார் அருணகிரிநாதர்.

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ?
எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுர பூபதியே!

சுர பூபதி - தேவர்களுக்கு அரசன். இந்திரன் தேவ ராஜனானாலும் அவன் தன்னுடைய ஆற்றலால் தன் பதவியைக் காத்துக்கொள்ள இயலாதவன். பெயருக்கு அவன் சுரபூபதியேயொழிய, உண்மையில் அமரர்களையும் அமரர்கள் தலைவனாகிய அவனையும் ஒருங்கே தன் அருளாணைக் குட்படுத்திப் பாதுகாக்கிறவன் முருகனே; ஆதலின அவனை, "சுரபூபதியே" என்றார்.

இந்தத் திருப் பாட்டு மமகார அகங்கார நீக்கத்தில் இறையின்பம் தோன்றும் என்ற கருத்தையும், அவ்வின்பம் அநுபவத்தால் அறிவதன்றிச் சொல்லும் எல்லைக்குள் அகப்படுவதன்று என்ற உண்மையையும் முருகன் பல வகைச் சல்லாபத் திருவிளையாட்டுடையவன் என்பதையும் உணர்த்துகின்றது.

நடுக்கி உயிரீர்க்கும் நமனை யுன்னி அஞ்சி,யுனை
அடுத்(து)அபயம் என்றேனை ஆளாய் சதாசிவமே

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பக்ஷியெனும் உக்ரதுர — கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை — வடிவேலும்;
திக்கமது மதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியபன் — னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ்வி ருப்பமொடு
, செப்பென எனக்கருள்கை — மறவேனே;
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எள்பொரிய வல்துவரை — இளநீர்வண்
டெச்சில்பய றப்பவடை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை — தனிமூலம்
மிக்கஅடி சில்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் — அருளாழி!
வெற்பகுடி லச்சடில வில்பரமர் அப்பரருள்
வித்தக மருப்புடைய — பெருமாளே!

(பதவுரை)

(இக்கவரை முதல அருளாழி வரை.)

இக்கு - கரும்பு; அவரை—, நல் கனிகள்—, சர்க்கரை—, பருப்புடன் நெய்—, எள—, பொரி—, அவல்—, துவரை—, இள நீர்—, வண்டு எச்சில் - வண்டின் எச்சில் எனப் பெறும் தேன்; பயறு—, அப்பம்—, வடை—, பச்சரிசி—, பிட்டு—, வெ(ள்)ளரிப் பழம்—, இடி - மாவு; பல்வகை - பலவகையான உருண்டை, கொழுக்கட்டைகள; தனிமூலம் - சிறந்த கிழங்குகள; மிக்க அடி சில் - சமைத்த பெரும் சோறு; கடலை—, (முதலியனவாக அன்பர் கள் நிவேதித்தவைகளை); பக்ஷணம் எனக்கொள் - சிற்றுண்டி என்று கொண்ட; ஒரு விக்கின சமர்த்தன் எனும்—, அருள் ஆழி - அருட் கடலே!;

அசையா நிலையாய் அளவற்ற வான்பொருளாய்
நிசமாய் வரும்போத நிதிக்கே அடைக்கலமே

(வெற்ப என்பது முதல்—பெருமாளே என்பது வரை.)

வெற்ப - (அருள்) மலையே!; குடிலச் சடிலர் - வளைந்த சடை வாய்த்தவரும், வில் பரமர் - (மேருமலையை) வில்லாக்கிய மேலான வரும் (ஆன); அப்பர் அருள் வித்தக - பரம பிதா அருளிய ஞான சொரூபா! மருப்பு உடைய பெருமாளே - ஒற்றைத் தந்தம் ஏந்திய பெருமையோனே!;

(பக்கரை முதல் மறவேனே என்பது வரை.)

பக்கரை - அங்கவடி; விசித்ரமணி - சிறந்த பல ஒளியுடைய நவரத்தின மாலை; பொன் கலணை - பொன்னிறமான சேணம் (முதலியன) பூண்டு; இட்ட நடை - நடையிடும், பக்ஷி எனும் உக்ர துரகமும் - பறவை எனப் பெறும் உக்கிர வேகம் உள்ள மயில் பரியையும்;

நீபப் பக்குவ மலர்த் தொடையும் - கடப்ப மரத்தின் (வண்டு வாய் வைக்காத) மலரும் பருவ மலர் மாலையையும்;

அக் குவடு பட்டு ஒழிய - அந்த (க்கிரவுஞ்ச) மலை அடியோடு அழிந்து பட; பட்டு உருவ விட்டருள் கை வடிவேலும் - அதன்மேல் தைத்து ஊடுருவிச் செல்லும்படி ஏவிய திருக்கரத் தெய்வ வேற் படையையும்;

திக்கது மதிக்க வரு குக்குடமும் - எண் திசையில் இருப்பவர் கள் சிறக்கப் பாராட்ட வரும் சேவலையும்;

ரக்ஷை தரு சிற்றடியும் - (ஆன்ம கோடிகட்கு) அரண் செய் யும் இளந் திருவடிகள் இரண்டையும்;

முற்றிய பன்னிரு தோளும் - திரண்டு உருண்ட பன்னிரண்டு திருத் தோள்களையும்;

செய்ப் பதியும் வைத்து - வயலூரையும் (ஒருசேர) அமைத்து;

உயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பு என - எடுப்பான சந் தம் கொண்ட (முருகன்) திருப்புகழை, அன்பொடு (பயன்தோன்ற மேன்மேலும்) பாடு என்று;

எனக்கு அருள்கை மறவேனே - எளிய அடியேற்கு, (நீர்) பாலித்த பேரருளை, (என்றும்) மறக்க மாட்டேனே, (எ - று).

விரிவுரை

இருபத்திமூன்று வகைதானு! நிவேதனப் பொருள்களை, அன் பர்கள் மென்மேலும் இடுகின்றார். உலகம் அனைத்தையும், தன்

மருவாய் மலர்கனியாய் வந்துதிக்கும் பீசமதாய்த்
தருவாய் நிழலளிக்கும் தந்தாய்! அடைக்கலமே

பெருத்த தொந்தியில் வைத்துக் காக்கும் பெருமாற்கு, அவைகள், பக்ஷணம் என்னுமச் சிற்றுண்டி அளவுதான். அதற்காக நாம் சும்மா இருந்து விடலாமா? மலையத்தனை ஸ்வாமிக்குக் கடுகத்தனை கற்பூரம்; இது பழைய பழமொழி அதுபோல், நம் அன்பின் அறிகுறியாக, நாம் விரும்பும் பொருள்களை, நம்பனிடம் சமர்ப்பிப்போம் என்பது சிறந்த பக்தர்களின் சிந்தனை.

வெல்லத்தில், பிள்ளையார் பிடித்து வைத்தாராம் ஒருவர், அதையே சிறிது கிள்ளி நிவேதித்தாராம் அவர். அவர் உள்ளம் அறிந்து, அதையும் மகிழ்ந்தாராம் ஆனைமுகர்.

என்னரே ஆயினும், யாவர்ஒன்று எண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்,
அன்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி; அலதுனை
உன்னலார் செய்தியை ஊறுசெய் திடுதி !

என்று, அந்த ஓங்கார மூர்த்தியின் உதயத்தில், உரைத்தாராம் சிவபெருமான்; அந்நாள முதல், விக்கினங்களை ஆக்க வல்லார்; வந்த விக்கினங்களைப் போக்க வல்லார் விநாயகர் என்று, உணர்ந்து வழிபட்டு உய்கின்றனர் மேலோர்.

மும்மல அழுக்கில் மூழ்கிய உயிர்களை, கழுவிக் காக்கும் அருட் கடலே! மேலேற்றும் அருள் மலையே! சிவனார் அருளிய அருளாளா! இமையவர் இடர் தவிர்க்கும் ஒற்றைக் கொம்பால், ஆணவ யானையை அடர்ப்பவனே! தடத்த நிலையில் கம்பீரா! சொரூப நிலையில், பிரம சைதன்யமாகப் பிரகாசிப்பவனே!

மோசமான உலக வாழ்வில் நாசமாகாதபடி, என்னையும் பொருளாக் கொண்டு, என்முன் எழுந்தருளினை!

அருணகிரீ! அமுதினும் இனிக்கும் அருமைத் தமிழால், ஓங்கார மயிலின் பெருமையைப்பாடு! சிவபோகம் தரும் கடப்பமாலையைக் கனிவு கொண்டு பாடு!

சாதுக்களைச் சாய்த்த வஞ்சக் கிரவுஞ்ச வரைகை அழிய, ஊடுருவிப் பாய்ந்து அதை ஒழித்த ஞான சத்தியாம் வேல் படையைப் பாடு! அகில உலகமும் அன்பொடு பாராட்டும் சிறந்த நாதச் சேவலைப் பாடு!

பரிபூரண ஞானம் பாலிக்கும் பரம குமரன் இளந் திருவடிகளைப் பாடு! வரத முருகன் வயலூர் வாசியைப் பாடு! பாடிக் கொண்டேயிரு என்று, கணேசா! நீர் செய்த மாபெரும் உபதேசத்தை மறக்கவே மாட்டேன் உமது வாக்கு என் நாக்கில் வாழு

முக்குணமாய் மூவுருவாய் முத்தொழிலாய் முன்பினிலா
நிற்குணமாய் நின்மலமாய் நிற்பாய்க் கடைக்கலமே

கிறது என்று, மூத்த பிள்ளையாரை அருணகிரியார் ஏத்திய பாடல் இது!

கணபதி பிரபாவம் கூறிய "உம்பர்தரு தேனுமணி" எனும் திருப்புகழ் விரிவுரை, சென்ற சித்திரையில், நம் அமிர்த வசனியில் இடம் பெற்றுளது. அதையும் இங்கு ஒத்திட்டு நோக்குவது நலம். அதனுடன் விநாயகர் அகவல விரிவுரையையும், ஓய்வுள நேரத்தில் ஓதுதல் நலம் தரும்.

மயில் பெருமையை மயில் வகுப்பின் விரிவுரையிலும், வேல் பெருமையை வேல் வகுப்பின் விளக்கவுரையிலும், திருவடிப் பெருமையைச் சீர்பாத வகுப்பின் பேருரையிலும், பன்னிருதோள் சிறப்பை கந்தர் கலிவெண்பா விரிவுரையிலும் காணலாம். அந் நூற்களின் விரிவுரைகள், நம் அமிர்த வசனி காரியாலயத்தில் கிடைக்கும்.

> பூர்வ பச்சிம தெட்சிண உத்தர திக்குள
> பத்தர்கள் அற்புதம் எனஓதும்
> சித்ர கவித்துவ சத்தமிகுத்த திருப்புகழை

இளைய பிள்ளையார்மேல் பாடுமாறு அருளிய மூத்த விநாயகர் திருவருளால், இந்த ஹேவிளம்பி ஆண்டில், பாராயண பக்தர்கட்கும் மற்றவர்க்கும், சகல செல்வ யோகம் மிக்க பெருக வாழ்வு சிறக்குமாறு, பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

வாழ்க உலகம்!

சீதை அருள் வடிவம்

(ஆ. கி. ரங்கராஜன்.)

இராமன் கருணைக் கடலென்றும், இலக்குமணன் 'அன்பின் சிகரம்' என்றும் முன்பு கண்டோம். 'அன்பின் சக்தி'யால் அகிலம் வாழ்ந்ததெனவும் கண்டோம். ஆயினும், ஸர்வ மங்களமும் பொழிந்து அன்பரை ஆதரிக்கும் எம் தன்னையாம் குணக்குன்றாகிய சீதாதேவியின் பெருமையை எவராலும் விரித்துரைக்க இயலாதென்பது திண்ணம்.

வானுதி பூதமுமாய் வாக்காதி மற்றெதுமாய்த்
தானய்த் தழைத்த தகவே அடைக்கலமே

நமது முன்னோர்கள் இதிகாசமாகக் கருதிய இராம கதையைப் பல்லோர் பலவாறு பகருகின்றனர். நிரீசுவர வாதிகள் இராமாயணம் என்பது பொய்க் கதை எனவும், அது உண்மையாக நடந்திருப்பின் அதில் தொண்ணூறு சத விகிதம் வெறும் ஜோடனையே என்றும் கூறுகின்றனர். வேறு சிலர் அது சரித்திரமே யன்றி இதிகாச, புராணமல்ல என்று கூறுகின்றனர். மற்றும் சிலர் ஆரிய-திராவிடப் போராட்டமே இராமாயணம் என்று உரைக்கின்றனர். ஆனால், புராதனக் கலை வல்லுநர்கள் இதைத் தங்கள் அறிவிற்கேற்றவாறு தங்கட்குத் தோன்றிய கருத்துக்களை யும் நீதிகளையும் தொகுத்து உருவாக்கி உள்ளனர்.

இராமாயணம் வைஷ்ணவரால் பாராட்டப் படுவதாயி னும் சைவப் பெரியார்களாலும் புகழப்படுகிறது. தமிழுல கத்திற்கு மாபெரும் பெருமையை அளிக்கும் திருப்புகழ்ப் பாக்கள் பதினாயிரம் பாடிப் பொழிந்த அருணை வள்ளல் முருகப் பெருமானைப் போற்றிப் பாடுகையில்

"மூனைச் சங்கோலிடு நீல மகோததி
அடைத தஞ்சாத விராவணனீள் பல
முடிக்கன்றோ கணை ஏவுமிராகவன் மருகோனே!"

என்று குறிப்பிடுவதன் மூலம் இராமாயணம் நடந்தது உண்மை என்பதைத் தெளிவாக்குகிறார். அவர் மேலும் தெரிவிப்பதாவது:

"ஏழு மரங்களும் வன்கு ரங்கெனும்
வாலியும் அம்பரமும்ப ரம்பரை
ராவணனும்சது ரங்க லங்கையும் அடைவேமுன்
ஈடழியும்படி சந்த்ரனும் சிவ
சூரியனும் சுரரும் பதம்பெற
ராம சரந்தொடு புங்கவன்திரு மருகோனே"
"திரை நீண்டிரை வாரியும் வாலியும்
நெடிதோங்கு மராமர மேழொடு
தெசமாம்சிர ராவணனார் முடி பொடியாக
சிலை வாங்கிய நாரணனார்"

விபகாரம் அற்ற இடமே விளங்கிவரும்
உபகாரம் உற்ற உறவோய்க் கடைக்கலமே

இவ்வாறு உரைக்கும் அருணகிரியார் சீதையை வேத லக்ஷ்மி என்று குறிப்பிடுகின்றார். ஜானகி தேவி தெய்வாம்சம் பொருந்தியவள் என்பதை உயர்நோக்கில் நாம் கண்டு அறிகின்றோம். நாம் எந்நோக்கில் மைதிலியைக் கண்டாலும் உயர்ந்தவளாகவே காக்ஷி அளிக்கின்றாள். "சீதையின் பிறப்பு, மறைவு பற்றிய வரலாறு சரித்திர விவரங்களில் காணப்படவில்லை. பொதுவாக, அவள் ஒரு அரசகுமாரி. அந்நாள் வழக்கப்படி சுயம் வரத்தில் மற்றோர் தேச அரசனை மணந்தவள் உல்லாசப் பொழுது போக்குக்கென கணவனுடன் வனாந்திர வனப்பைக் காணவந்தாள். தென் திசையில் பிரம்மாண்ட சாம்ராஜ்யத்தை அமைத்து அரசாண்ட பேரரசன் ஒருவன் அவளைக் கவர்ந்து செல்ல, அவளது கணவன் அவ்வனத்தே வசித்த அநாகரிக மனிதர்களை (குரங்குகளை) உதவியாகக் கொண்டு, அப்பேரரசனின் (இராவணனின்) சகோதரனை (விபீஷணனை) வேவுகாரனாக அடைந்து, சூதாக அப் பேரரசனை வீழ்த்திவிட்டு மனைவியுடன் நாடு திரும்பினன்" என்று குறுகிய நோக்கர்கள் கூறுகின்றனர்.

கணவனை இழந்தவுடனே உயிரிழந்த காரிகையாம் நெடுஞ்செழியன் மகிஷிக்கும், கணவன் நல்லவன் என்பதை நிரூபித்த கண்ணகிக்கும் சீதை ஈடாகாள் என்று சிலர் கருதுகின்றனர். சரித்திரக் கதையான சிலப்பதிகாரத்துடன் இதிகாசத்தை இணைப்போமாயின், சீதை கண்ணகிக்குத் தாழ்ந்தவளல்ல என்பதை நன்கு அறியலாம். தன் கணவன் சந்தேகிக்கப்பட்டுக் கொலையுண்ட செய்தியை இடைச்சிகள் கூறக் கேட்ட கண்ணகி, அவர்களெதிரிலேயே கதிரவனை அழைத்து, "சூர்யனே! என் கணவன் கள்வனோ?" எனக் கேட்டதாயும், ஆதவனும் அதற்கு "அவ்வாறு எண்ணிய மதுரையை அக்கினி அழிக்கும்" என உரைத்ததாயும் கூறப்பட்டுள்ள விவரத்தை ஏற்பவர்கள், இலங்கையை எரித்த அனுமனுக்கு இடுக்கண் விளைத்த

அண்டாண்ட கோடி அருமறைநூல் ஆதியெலாம்
கொண்டாட வந்த குருநின் அடைக்கலமே

லாகரதென எரிதழலோனை சீதை இறைஞ்ச அவன் அதற்கு இசைந்த செய்தியையும் ஏற்கத்தான் வேண்டும். மேலும் அவள் உத்தம ஸ்திரீ. கணவனின் வீர பராக்ரமத்தையும், குணநிசயங்களேயும் பிற்கால சம்பவங்களேயும், அதாவது இராமனல் தசமுகன் வீழ்வன் என்பதையும் சீதை உணர்ந்திருந்தபடியால், கணவனின் வீரத்தைக் காசினியோர் அறியவேண்டும் என்ற மேலான கருத்தைக் கொண்டிருந்த காரணமே அவள் கடைசிவரை உயிர் வாழ்ந்திருந்ததாகும்.

தற்போது நாகரிகம் உச்ச நிலையை எய்தியுள்ள நவீன யுகம்—அணு சகாப்தம். அசடர் சந்ததியில் அறிஞன் தோன்றுவன்; அசடனும் நாளடைவில் அறிஞனகத்தான் வேண்டும் எனறு நிரூபிக்கப்படும் நேரம். அவ்வாறிருக்க, ஆதியில வசித்தவர்கள நம்மைப்போல் மானிடர்களே! ஆனல் அக்காலத்து வசித்த மக்களிடை தோன்றிய அறிஞர்களோ, பெரியோர்களோ, கவிஞர்களோ அவர்களைப் போல் இந்த நவீன யுகத்தில் இலர் என்றே கூறவேண்டும். அவர்கள் நம்மால் ஊகித்தும் உணராத அளவில் கவிதைகளேயும் சிருஷ்டித்துள்ளனர். அரும்பெரும் காரியங்களைச் சாதித்துள்ளனர். அவர்களைப் போற்றிப் புகழ வேண்டியது நம் கடமை பேரறிஞர்களாகிய அவர்கள் இராம ராஜ்யம் வெகு நீதியாகவும் வளமை பெற்றும் நடைபெற்றது என்று கூறுகின்றனர். பல்லாண்டுகட்கு முன் நிகழ்ந்த ஒரு கதைக்குக் குற்றம் காண்பது நம்மிடம் உள்ள குறைபாடே யன்றி வேறல்ல.

மிகப் பெரும் புலவர், பல்லாயிரம் கீர்த்தனைகளை இயற்றிய தியாகராஜ சுவாமிகள், எண்ணிப் பார்க்கவும் இடமற்ற, ஆயுத பலமே சிறந்தது என்று நினைத்து மாந்தர் வாழ்ந்த காலத்தே, அஹிம்சைப் போரில் மாபெரும் அந்நிய ஏகாதிபத்யத்தை வென்று பாரத நாட்டை விடு

கண்ணாடி நோக்கியிரு கண்மணியைக் காண்பவர்போல்
உண்ணாடி நோக்கியுனை உணர்வார்க் கடைக்கலமே

வித்த மஹாத்மா காந்தியடிகள், வெளிநாடுகளில் பாரத மக்களின் பண்பாட்டையும் இந்து மதத்தின் உயர்வையும் பறைசாற்றி முழங்கிய விவேகானந்த சுவாமிகள் முதலினோர், இராமனை இறைவனாகக் கண்டு அவனருள் பெற்றவர்கள் என்பது எவராலும் மறுக்க முடியாத விஷயம்.

சீதை தெய்வாம்சம் உடையவள் என்பதை சர்ச்சை செய்தால், அவள் கருணையே உருக்கொண்டவள். காகஅசுரனின் உயிரைக் காப்பாற்றினாள். தன்னைக் கவர்ந்த தசமுகனை சபித்து அழிக்கக் கருதாமல் அவனை எவ்வாறேனும் நல்வழிப்படுத்த முயற்சித்தனள். தன்னை இம்சித்த அரக்கியரையும் ஆசீர்வதித்தனள். தன் வாழ்க்கையின் இறுதியில் யாவற்றையும் வெறுத்து புவிவெடிக்கச் சபித்து அதனுள் இறங்கி மறைந்தனள். அடியார்களான கபீருக்கும் இராம தாசருக்கும், அருள் பாலிக்கும்படி, இராமனைத் தூண்டினள். இதைத் தவிர இன்னும் மேலான குணங்கள் நிரம்பப் பெற்றவளே வைதேகியாம் சீதை. தாய்மையில் சிறந்து கற்பில் உயர்ந்து கருணை பொங்கத் திகழும் அன்னை ஸௌமித்ரியாம் ஜானகி தேவியை, நமது அருணை வள்ளலார் மறைவடிவான ஸ்ரீ தேவி எனக் குறிப்பிடுகின்றார்.

"வேலை வற்றிட நற்கணை தொட்டலை
பீதடைத்து தனிப்படை விட்டுற மலைபோலே
வீறரக்கன் முடித்தலை பத்தையும்
வேரறுத்து நிலத்தில் விழச்செய்து
வேதலக்ஷ்மியைச் சிறைவிட்டருள்
வீரவச்சுத னுக்குநல் அற்புத மருகோனே."

—திருத்தணிகைத் திருப்புகழ்.

இத்தகைய சிறப்புகள் பெற்ற சீதாபிராட்டியை அருள் வடிவம் என்று கூறத் தடை என்ன?

வாழ்வு குலையாத மௌன புரிக்கரசாய்த்
தாழ்வை யடையாத தனிமைக் கடைக்கலமே

கட்டுரை : (1)

கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

முன்னுரை

வேதாந்தம் ஒரு வரண்ட சாஸ்திரம் என்ற எண்ணம் பெரும்பாலான மக்களிடையே ஒரு காலத்தில் பரவியிருந்தது. இன்றுகூட ஓரளவு அந்த எண்ணம் இருக்கிறதென்றும் கூறலாம். தலையில் வழுக்கை விழுந்தவர்கள், வேலையினின்று ஓய்வு பெற்றவர்கள், வாழ்க்கையில் எந்தக் காரணத்தாலோ வெறுப்புற்றவர்கள் ஆகியோருக்குத்தான், ஆன்மீகப் பாதை நெருக்கமானது என்ற அபிப்பிராயம் கூட இன்றைய துரதிர்ஷ்ட சமூகத்தில் உண்டு. ஆன்மீகத் துறையிலே லௌகீகக் கிரியைகள் என்று கூறத்தக்க ஆலய வழிபாடு, சுவாமி தரிசனம், பஜனை போன்ற அம்சங்களிலே கூட தாராளமாகக் கலந்து கொள்வதற்கு இன்றைய 'நாகரிக' இளைஞர்கள் வெட்கப் படுகிறார்கள். விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமின்றி, சிலர் ஏதோ இயந்திரம்போல் நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்து வருகிறார்கள். அர்த்தமற்ற சடங்குகளைக் கண்மூடித்தனமாக நிறைவேற்றுபவர்களும் உண்டு. வேதாந்த அறிவு வாழ்க்கைக்கு உதவாதது என்ற மூடத் தன்மை, படித்த வாலிபர்களிடமும் ஊறி யிருக்கிறது. நாஸ்திக நண்பர்களைப்பற்றி நான் இங்கே கூற முன் வரவில்லை. நல்ல வைதீக ஆஸ்திக குடும்பத்தில் பிறந்து உயர்தரக் கல்வி பயின்றவர்களே கூட தங்களுடைய நித்ய கர்மானுஷ்டானங்களை, 'ஒழிந்த' வேளையில் 'சுருக்க'மாகவும் அவசர அவசரமாகவும் செய்கின்றனர். இத்தகைய கேவலமான நிலை ஏன் ஏற்பட்டது என்று சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாதாந்த மெய்ஞ்ஞான நாயகமா நண்ணியருள்
போதாந்த பூரணமாம் பொருள்நிற் கடைக்கலமே

அந்தக் காலத்திலே மனிதன் தனக்கு என்றும் தேஜஸைக் கொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய பிரம்ம வித்தையையே தான் கற்கவேண்டிய கல்வியாகக் கொண்டான். ஒழுக்கமும் சீலமும் நெறிதவறாத மனப் பண்பும் அன்றைய மக்களிடம் இயற்கையாக இரத்தத்திலேயே ஊறியிருந்த மாதிரி அமைந்திருந்தன. தர்மத்திலிருந்து தவறும் எண்ணமே எழுவதற்கு சந்தர்ப்ப மில்லாம லிருந்தது. உலகிற்காகவே படித்து உலகிற்காக இல்லறம் நடத்தி அந்த உலகத்திற்காகவே வாழ்வது என்ற லட்சியம் இந்த பிரம்ம வித்தையைப் பெற்றவர்களிடம் இருந்தது.

காலம் மாற மாற 'நாகரிகம்' என்ற பெயரால் ஆபாசப் பழக்க வழக்கங்கள் படிந்து, மேலான வாழ்க்கையைத் தரமுடியாத வரட்டுப் படிப்பை வித்தையாகக் கொண்டு சாஸ்திர அறிவை ஒதுக்கித் தள்ளி இயந்திர அறிவை மனிதன் பெருக்கிக் கொள்ள ஆரம்பித்தான். வைதீகர்களையும் வேதாந்திகளையும் பரிகசிக்கும் நிலை வந்தது. பிள்ளையை எந்த உத்தியோகத்திற்குப் படிக்க வைப்பது என்ற எண்ணம் பெற்றோர்களிடம் எழுந்ததேயன்றி அவன் தேஜஸையும் சிரேயஸையும் உயர்த்தக்கூடிய படிப்பு எது என்ற கேள்வியே எழவில்லை! இதற்கிடையே நாஸ்திகம் வேறே புகுந்து கொட்டமடித்தது. கேட்பானேன்? டாக்டராகவும், வக்கீலாகவும், கலெக்டராகவும், குமாஸ்தாவாகவும் உருவெடுத்த யுவர்கள் தெய்விக வாழ்க்கையை மறந்து விட்டார்கள். தப்பித் தவறி ஏதோ ஒரு சமயத்தில் பழமையான இதிகாச, புராண, சாஸ்திரீய வசனங்கள் அவர்கள் காதுகளிலே விழுந்தாலும், அவற்றின் ஆழ்மையான பொருள் விளங்காததால், அவை 'தொலைந்து போகட்டும்' என்று விட்டு விட்டார்கள்!

ஆனால் உண்மை என்றும் அழிவதில்லை. மாறுவதில்லை. பொய்ம்மை மலிந்து தன்னுடைய கோரஸ்வரூபத்தைக் காட்டும்போது சத்தியம் மீண்டும் துளிர்த்து வளரத்

அல்லும் பகலுமற்ற ஆநந்த மானநிலை
சொல்லும் பெருங்கருணைச் சோதிக் கடைக்கலமே

தொடங்கும். அவ்வப்போது பல மகான்கள் தோன்றி சமுகத்திற்கு அது மறந்துபோன உண்மைகளை மீண்டும் புதிய வழியிலே உபதேசம் செய்து சரியான பாதையைக் காட்டுகிறார்கள்.

இன்றைய தமிழ்நாடு மீண்டும் தெய்வீகப் பாதையிலே திரும்ப ஆரம்பித்திருக்கிறது என்று எனக்குத் தோன்று கிறது. விஞ்ஞான அறிவையே மேலாகக் கொள்ளும் இந்தக் கால யுவர்கள் மெய்ஞ்ஞான அறிவைப் பெறவும் விழைகிறார்கள் என்றும் தெரியவருகிறது.

விஞ்ஞான அறிவு சரியானதாக இருக்குமானால் அது 'பழைமை' என்று எதையும் அலட்சியப்படுத்தி விடாது. 'புதுமை' என்று எதையும் அப்பட்டமாக ஒப்புக்கொள்ள வும் செய்யாது. இந்த முறையில் வேதாந்த, தத்துவசாஸ் திரங்களை அணுகி ஆராய்ந்தால், என்றும் புதுமையும் கவர்ச் சியும் பொருந்திய கருத்துக்களைக் காண்பதோடு அந்தத் துறையில் பிரவேசித்து விட்டதன் பயனாக, நமது பண்பும் அறிவும் படிப்படியாக உயர்ந்து உள்ளுணர்வு பெருகு வதைக் காணலாம். அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று எதுவோ, அதுவே அடைய வேண்டியதுமான ஒன்று. முழு மூச்சுடன் பிரவேசிக்க வேண்டியதுதான் நமதுவேலை. சரியான முடிவு முன்னரே தயாரா யிருக்கிறது. அறியும் பொழுதே இன்பம் பயப்பதும், ஒரே சமயத்தில் மனித னுக்கு எல்லா அம்சங்களினாலும் உயர்வைத் தரவல்ல தும், அறிவும் அறிபடுபொருளும் அறிவோனும் ஒன்றே யென்ற உண்மையைக் காட்டக் கூடியதுமான தத்துவ அறிவன்றோ மனிதனுக்குத் தேவை?

அத்தகைய தத்துவ அறிவைத் தரவல்லதும், புராதன மானதும், அதே சமயத்தில் என்றும் புதுமையானதும், பிரச்னைகளுக்கு விஞ்ஞான ரீதியில் விடையளிப்பதும், சரி யானபடி கற்று விட்டால் நிரந்தரமான திருப்தியையும் அமைதியையும் நிலையான இன்பத்தையும் ஒருங்கே தரக்

அகண்டபரி பூரண ஆநந்த மாகடலாய்ப்
புகழ்ந்துமறை போற்றும் பொன்னே அடைக்கலமே.

கூடியதுமான 'பகவத்கீதை'யை, எளிய நடையில் என் சிற்றறிவுக்கு எட்டியவரை விமர்சனம் செய்யும் திருப்பணியை ஆரம்பித்துள்ளேன்.

தேர்த்தட்டிலே நின்று பார்த்தனுக்கும் உலகிற்கும் தெய்வீக வாழ்க்கையை உபதேசித் தருளிய கண்ணனுடைய அருளும், பெரியோர்களுடைய நல்லாசியும் இருக்குமானால், எடுத்த இத்திருப்பணி நிறைவேறியே தீருமென்பதில் என்ன சந்தேகம்?

(தொடரும்)

ஞான தாகம்

(அன்பன்)

ஞானம் இல்லாதவன் நன்மைகள் ஏதும் அடையான். ஞானமே துக்க நிவர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் அடைவிக்கும். இஞ்ஞானம் இறைஞானம், சிவஞானம், பரஞானம், ஆத்மஞானம் எனப் பல பெயர்களால் வழங்கப்படும்.

மனிதன் வாழ்க்கையில் எத்துணை நலன்களை அடைந்திருப்பினும், ஞானம் அடையாவிட்டால் அவன் தன் வாழ்வினைப் பாழ்படுத்தியவன் ஆவான். இதனையே கிறிஸ்தவர்கள் 'நீ உலகம் முழுதினையும் உனக்குச் சொந்தமாக அடைந்தாலும், உன் ஆத்மாவை இழப்பாயானால் என்ன பயன்' என்றனர். நாயனர்,

கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்—என்றும்,

சங்கரர் பஜகோவிந்தத்தில்,

'மூடனே, நீ உன் அறிவை வளர்ப்பான் வேண்டி எத்தனை கலைகளைப் பயின்றிருப்பினும், சாகுங்காலத்தில் அவையெல்லாம் உனக்குப் பயன்தராது. இறைவன் திருவடிப் பற்றொன்றே உன்னை அப்போது ரக்ஷிக்கும். ஆதலால்

கோவிந்தனைப் பஜனை செய்வது ஒன்றே உன் கடமையாகக் கொள்! என்றும், கங்கா சாகர யாத்திரை செய்து, தவம் விரதம் தானம் முதலியன இயற்றினும், எந்த மதத்தினுலேனும் ஞானத்தையடையாதவன் மோக்ஷத்தையடைய மாட்டான்—என்றும்,

'ஆத்மஞானம் இல்லாத மூடன் சம்சாரம் என்னும் நரகத்தில் ஆழ்ந்து துன்பத்தினை அடைவான்'—என்றும் கூறியுள்ளனர்.

கைவல்யம் என்னும் ஞான நூலினும் ஞான சாதனங்கள் நான்கனுள் 'முமுக்ஷுத்துவம்' என்னும் மோக்ஷத்தில் இச்சையுடைமை வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

நகசிக பரியந்தம் தீப்பற்றிக் கொண்டவன் நீர் நிலையைத் தேடி அலைவது போலும், தண்ணீரைக் கண்டவுடன் அதனுண்மூழ்கிக் குளிர்ச்சியடைதல் போலும், சாதகன் ஞானாசிரியனைத் தேடி, ஞானத்தினை யடைந்து ஆத்ம சாந்தியினையடைதல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனையே இராமகிருஷ்ணப் பெருந்தகையாரும், 'நீ கடவுளைக் காணுமல் (ஞானமடையாமல்) உலகில் செய்யும் காரியங்கள் அத்தனையும் பயன்படா. ஆகையால், நீ கடவுளை முன்னே கண்டுகொள், பின்னே உலகில் பணி செய்' என்றும்,

'கடவுள் உலகில் எல்லா காரியங்களையும் செய்கிறுர். அப்படியிருக்க, 'நான் பெரிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்கிறேன்' என்பதற்கு நீ யார்? என்றும்,

'முன்னே நீ யார், கடவுள் யார் என்பதைத் தெரிந்து கொள். பிறகு நீ உலகில் நல்ல பணிகளைச் செய்ய முடியும்—என்றும் கூறுகின்றுர்.

ஆதலால்,

'தன்னையும் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல், பின்னையத் தலைவன் தானுய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்' என்ற கைவல்ய வாக்குப்படி, நாமனைவரும், பர ஞானம் யாதெனவறிந்து, அதனை அடைதல் ஒன்றினையே நமது வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொண்டு நலம் பெற்று வாழ்வோமாக.

ஐம்புலனைக் கட்டி ஆன்மநிட்டை கொண்டுமனக்
கம்பமின்றி நல்லவர்கள் காண்பாய்க் கடைக்கலமே

ஞான தாகமின்றி நசித்து நீ போகிறாய்
நியாயமோ இதுவும் சொல்லடா—மனமே
நானெனும் அகந்தையால் நானில மீதினில்
ஆனதுங் கொண்டு நீ அலைந்து திரிகிறாய்
ஞான தாகமே நல்வழி காட்டிடும்
ஆனதால் இன்றேநீ ஆரம்பம் செய்யடா
எந்த நேரத்திலும் எத்தொழில் செய்திடினும்
சுந்தரஞானம் இன்றித் துணிபொருள் இல்லையடா
உன்னையு மறியாமல் உலகையு மறியாமல்
பின்னையுங் காரியங்கள் பேணலுங்
கூடுமோ ஞானம்.

பக்தி

(சி. குமாரஸ்வாமி.)

பக்தி என்றால் என்ன? சுக துக்கங்களையும் உலகப் பற்றையும் அற்ற ஒரு பரம்பொருளிடத்தில் அன்பு பூணுதல். இதையே திருவள்ளுவர் தமது குறளில் "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு" என்று மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். அதுமட்டுமா? குறளின் ஆரம்பமே "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு" என்று கடவுள் வாழ்த்திலிருந்து ஆரம்பமாகிறது. எனவே பக்தி எவ்வளவு அவசியம் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இனி, பக்தி செய்யும் முறைகள் எவை என்பது குறித்துச் சிறிது ஆராய்வோம்.

1. உருவ வழிபாடு: பெரும்பான்மையோருக்கு இதுவே சிறந்தது. ஏனெனில் அவர்கட்கு ஓரிடத்திலே உட்கார்ந்து மனதை ஒருமுகப்படுத்தி தியானத்திலிருக்க, அவர்களின் நித்திய அலுவல்களின் காரணத்தாலோ அல்லது அறிவு முதிராததாலோ இயலாது. ஆகவே தான்

மதியளைய ஞானநெறி வாய்த்துவரு மாதவர்க்குப்
புதையலென வந்துதிக்கும் பொருள்நிற் கடைக்கலமே

நம் முன்னோர்கள் கோயில்களைக் கட்டி, உற்சவாதிகளை ஏற்படுத்தினர். உருவ வழிபாடு பழங்கால முதல் இருந்து வருகின்றது என்பதைச் சங்க கால நூல்களிலிருந்து அறி கிறோம். இதன் உட்கருத்து என்னவெனில், மனதை ஒரு நிலைக்கு கொண்டுவர இயலாமல் உலக சுக துக்கங்களில் உழல்பவர்கள் சிறிது நேரமாவது அவற்றை மறந்து கடவுளை வணங்கச் செய்யவேண்டும் என்பதே.

2. பண்டிகைகள்: கோயிலுக்கோ, அல்லது விழாக்களுக்கோ செல்ல இயலாதவர்கள் பண்டிகை நாட்களி லாவது கடவுளிடம் பக்தி செய்யவேண்டும் என்பதற்காக கந்தர் சஷ்டி, கிருத்திகை, சிவராத்திரி, ஏகாதசி, ஸ்ரீ ராம நவமி, ஸ்ரீ ஜயந்தி என்ற பண்டிகைகளையும் நம் முன்னோர் கள் ஏற்படுத்தி வைத்தனர்.

3. அடியார் கழகங்கள்: கடவுளின் வழிபாட்டில் ஈடுபட்டுள்ள அடியார்கள் பலர் கூடிச் சங்கம் அமைத்து கடவுள் திருப்பெயரைப் பஜித்தல். இங்கு இசை மூலமாக வும் கடவுளைத் துதிக்கலாம். இந்த முறையானது மேற் கூறிய இரண்டையும் விடச் சிறந்தது.

4, தியானம்: இது, ஓரிடத்தில் தனியே அமர்ந்து மற்ற (வெளியுலக) எண்ணங்களை மறந்து கடவுளை நினைத் தல் இந்த நிலையைச் சற்று முயன்றால் எல்லோரும் அடையலாம். காயத்ரீ ஜபம், சந்தியாவந்தனம் இவற்றைப் பழகினால் நலம்.

5. துறவு நிலை: இந்த நிலையை அடைவது மிகவும் சிரமம். இது எல்லாம் கடந்த நிலை, அதாவது மனம் உலக விஷயங்களிலிருந்து விடுபடும் நிலை. (ஆசையற்ற நிலை.) இதற்கு உறுதியான மனமும், பூர்வ ஜன்ம புண்யமும் தேவை.

பக்தியின் அவசியம்: பக்தியிருந்தால் அன்பு, சகிப் புத் தன்மை, பொய்யாமை, பொறுமை, அடக்கம், பிற உயிர்கட்கு ஊறு செய்யாமை, நல்லொழுக்கம் முதலிய

தொழுதுகதி தேடித் துதிபுரியும் தொண்டர்தமைப்
பழுதுவராமல் காக்கும் பராநிற் கடைக்கலமே

நற்குணங்கள் தானாகவே வந்தடையும். சீரிய குணங்களிருப்பின் பெரியோர் நட்புண்டாகும். அதன் மூலம், வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைச் சிரமமின்றிச் சமாளிக்கலாம். பக்தியிருந்தால் தைரியம் பிறக்கிறது. அதனாலேயே "திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாலே, ஒருத்தனை மதிப்பதிலை உந்தனருளாலே" என்று பாடிப் போந்தார் அருணகிரியார்.

ஒருவனுக்கு உண்மையான பக்தியிருப்பின் அவனது மனமானது கடல் அலைபோல் அலையாமல் ஒரே நோக்குடன் நிற்கின்றது. விருப்பு வெறுப்பற்றவனாகிறான். மற்ற மனிதர்களைவிட மிகவும் சக்தியுள்ளவனும் ஞானியும் ஆகிறான். இதையே ஸ்ரீ கிருஷ்ணபகவான் "துன்பத்தில் துடியாத மனத்தினனாய், இன்பத்தில் ஆசை எழாதவனாய், விருப்பம், பயம், கோபம் இல்லாதவனாய் இருப்பவனே ஞானம் நிலைபெற்ற முனிவன் எனச் சொல்லப்படுகிறான்" என்று ஸ்ரீ தனஞ்ஜயனுக்குக் கீதைமூலம் உபதேசிக்கிறார்.
(சாங்கிய யோகம்-56)

அருணகிரியும் ஐம்பூதத்தலங்களும்

(S. T. இராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

ஐம்பூதத் தலங்கள் :

இதுகாறும் கூறிய ஐம்பூதத் தலங்களாகிய காஞ்சி முதல் சிதம்பரம் ஈறாக உள்ளவை, ஐம்முகச் சிவனார் ஆலயங்களாயமைந்தவை. அவற்றை அருணகிரியார் சென்று கண்டு தொழுது அருளிய பாடல்களின் மூலம், அங்குள்ள அறுமுகச் சிவனார் சிறப்பு ஒருவாறு கூறப்பட்டது. இனி அத்திருப்புகழ் முனிவரரின் பாடல்களின் துணைகொண்டே, வேறு பல ஒற்றுமைபட்ட செய்திகளால் முருகனுக்குரிய ஐம்பூதத் தலங்கள் எவை என ஆராய்வாம்.

பாரின்பப் பற்றகன்று, பாடிவரும் பத்தருளம்
பேரின்பப் பித்துறச்செய் பெம்மாற் கடைக்கலமே

1. பிருதிவி தலம் :

இது மண் என்னும் முதற் பூதத்தினதாகிய காஞ்சி என முன்னர் கூறினோம். ஆறுமுகப் பரமனது ஆறு திருப் பதிகளில் முதற் பதியான திருப்பரங்குன்றம், பிருதிவி தலம் எனத் தக்கபடி அமைந்துள்ளது. தவமியற்றிய முப் பத்திரண்டு அறம் வளர்த்த காமாட்சியம்மை காஞ்சியில் இறைவனைக் கணவராக எய்தப் பெற்றார். அதுபோலவே தவக் கொடியான தெய்வயானையும் திருப்பரங்குன்றில் செவ் வேளை மணஞ்செய்து கொண்டார். "சுரபதி மகள்தன்னை மணமதுற் றிடுவோனே" என்பர் அருணகிரிநாதர்.

கம்பையாற்றில் வெள்ளம் வந்தபோது தாம் வழிபடும் ஏகம்பருக்கு இன்னல் வராதபடி தழுவிய காமாட்சியின் குயத் தழும்பும் வளைச் சுவடும் ஏற்றுக் குழைந்து நின்றார் பிரானார். இங்கே "தெய்வயானை தனச் செப்பும் கவசம் புனைபுயன்" என்பதனால் முருகபிரானும் தெய்வயானை அம்மையின் குயக்குறி கொண்டுள்ளமை அறியலாம்.

2. அப்புத் தலம்:

திருவானைக்காவிற்கு ஆலயத்தில் தண்ணீரால் சிறப் புண்டு. திருச்சீரலைவாயும் வதனாரம்பம், நாழிக்கிணறு இவற்றால் சிறப்புடையது. ஆனைக்காவில் அண்ணல் காவிரியில் விழுந்த சோழராசனது ஆரத்தைச் சிவனார் திரு மஞ்சனக் குடம் மூலமாக ஏற்று அருளினர். அதுபோல் அலைவாய் மகிமைப் பாமாலையைப் புனைந்த வென்றிமாலைக் கவிராயர் அதனை யாரும் மதிக்காமையால் கடலில் எறிந் தனர். அது முருகனருளால் உபய கதிர்காமத்தில் சென்று கரையேறியது. அதனைத் தண்டபாணி சுவாமிகள் கண் டெடுத்து உலகிற் பரவச் செய்தனர். அப் பாமாலையை ஏற்றுச் செவ்வேட் பரமர் வென்றிமாலைக் கவிராயருக்கு முத்தியளித்தார். திருஆனைக்காவில் யானை பூசித்து முத்தி பெற்றது. செந்திலிலும் (கர்த்தபம்) கழுதையொன்று முருகன் ஆலயத்தைப் பெருமை அறியாமலேயே வலம்வந்து சந்நிதானத்தில் விழுந்து இறந்து முத்தி பெற்றது. அயக்ரீ

அன்புருகிக் கண்ணீர் அலைமோதித் தாள்நனைப்ப
இன்புருவாம் அன்பர்க் கெளியாய் அடைக்கலமே

வர் என்ற முனிவரின் சாபம் ஏற்ற கனககஸ்தூரி என்ற பாண்டிநாட்டு இளவரசி, செந்திலிற் செம்மலை வந்தித்து வதனாரம்ப தீர்த்தத்தில் மூழ்கி சாப நீக்கம் பெற்றாள். இதனை "மகள் வாசிகைத்தோ" என்ற கந்தரந்தாதி (51-வது) பாடலால் அருணகிரிநாதர் அறிவிக்கிறார்.

3. தேயு (அக்னி) தலம் :

அக்கினித் தலமாகிய திருவண்ணாமலையினைப்போலவே பழநித் திருவாவினன்குடியையும் கொள்ளலாம். திரு அண்ணாமலை தோன்றிய விவரம் முன்னரே கூறப்பட்டுள்ளது. அகந்தையால் தாந்தாம் பரத்துவப் பொருள் என எண்ணிப் போரிட்ட அரி அயனாகிய இருவரும் வராகமாய் மண் கிளைத்தும் அன்னப் பறவையாய் அளவற்ற காலம் அலைந்தும் அறிய வொண்ணாதபடி எழுந்த செந்தழல் சோதியே அண்ணாமலை யாயிற்று. எனவே திருமால் பிரமர் செருக்கடக்கிய தீவண்ணர் தலமிது வானதுபோல, பிரமனார் தருக்கடக்கி, "சிட்டித் தொழிலதனைச் செய்வது எங்ஙன் என்று குட்டிச்சிறை" யிட்டருளிய குமரன் கோவில் திருவாவினன்குடி ஆகும். முனிவர் கந்தருவர், "புள்ளணி நீள் கொடிச் செல்வனும் (திருமாலும்), 'வெள்ளேறு வலவயினுயரிய பலர் புகழ் திணிதோள் உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண் மூவெயில் முறுக்கிய முரண்மிகு செல்வனும் (சிவனாரும்), நூற்றுப்பத் தடக்கிய நாட்டத்து நூறுபல் வேள்வி முற்றிய வென்றிடு கொற்றத்து ஈரிரண்டேந்திய மருப்பின் எழில் நடை தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும் (இந்திரனும்), தாமரை பயந்த தாவி லூழி நான்முக ஒருவற்சுட்டிக்" கந்தபிரானைக் காணுமாறு திருவாவினன் குடிக்கு வந்த செய்தியை நக்கீரரது திருமுருகாற்றுப்படையில் மூன்றும் பகுதி நன்கு விரித்துள்ளது. இச்செய்தியை நமது சந்தப் பாவலர்,

"அயனைக் கறுவு கோபக்காரனும்
......மேதகு குறத்தி திருவேளைக் காரனே"

உள்ளக் கருத்திலுனை ஊன்றியுணர்ந் துள்ளுருகக்
கள்ளமலம் அகலக் காண்பாய்க் கடைக்கலமே

என்று கூறுகிறார். இந்நிகழ்ச்சியால் அயனார் அகந்தை அடக்கிய அற்புதமுடையது ஆவினன்குடி என்க. திருவண்ணாமலை, கார்த்திகை தீபத்தால் ஆண்டிற்கொருமுறை மலையுச்சியில் சோதி காட்டி சிவனார் சிவப்பிரகாசத்தை உலகிற்கு உதவுகிறது. அது போலவே பழநித் திருவாவினன்குடியிலும் மலைமேல் நின்ற சுப்பிரமணியன் ஓங்கார ஒளி வட்டமாய் நிர்த்த ஜெகச் சோதியாய் நிலவுகிறான் என்பது.

"வற்கரமுமாகி வளர் பழநிமலைமேல் நின்ற சுப்ர மணியா அமரர் பெருமாளே"

(வற்கரம்—ஒளி வட்டம்)

என்ற பழநித் திருப்புகழால் உறுதியாகிறது. ஞானப் பழநி நாயகனையே "கிரிராஜ தீபமங்கள ஜோதி" என்பது திருவாவினன்குடித் திருப்புகழ். இந்தத் தொடர் மூன்றுவகையாகப் பொருள் தர நிற்கும் அழகு சிந்தித்து அநுபவிக்கத் தக்கது.

1. கிரிராஜ!—மலையரசே! குறிஞ்சிக் கிழவனே! தீப மங்கள ஜோதி—ஒளிவளர் விளக்குகளால் காட்டப் பெறும் மங்களகரமான ஜோதியே! ("விளங்கு தீபம் கொண்டு உனை வழிபட—அருள்வாயே)

2. கிரிராஜ மலையரசான இமவான் தீப—குலவிளக்கான பார்வதியம்மையார் தந்தருளிய மங்கள சோதீ—(அடியார்க்கு) சுபத்தைக் கொடுக்கும் ஒளியே ("கிரிராஜ குமாரி மகன்"—கந்தரனுபூதி).

3. கிரிராஜ—மலைநிலத் தலைவனான (வேல்நம்பி) வேடராசனுடைய, தீப—குலத்தை விளக்க செய்த வள்ளி நாயகியாகிக்கு, மங்களசோதி—இன்பஞ் செய்யும் அருட் பெருஞ்சோதியே! "கிராதகுலிக்கு இறைவா" (கந்தரனுபூதி).

இவ்வாறான திருவாக்குகளால், மங்கள சோதி வடிவினனாகிய தண்டபாணியின் தலமும் சோதியாக விளங்குகிறது என்பது புலனாகும். திருவண்ணாமலையில் சிவனார் மலையடிவாரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ளது போன்றே திருப்பழநியிலும் முருகவேள் பழநிமலை

அத்தா அரசேயென் றுடியுனைக் கொண்டாடும்
சித்தாந்தர் போற்றும் செம்மால்நிற் கடைக்கலமே

யடிவாரத்தில் திருக்கோயில் கொண்டுள்ளார். மேலும், பஞ்ச பூத தலங்களாகக் கூறப்படும் சிவனாது தலங்களில் திருவண்ணாமலை மூன்றாவது தேயுத் தலமாய்க் கூறும் உலக நெறி போலவே முருகவேளது ஆறு திருப்பதிகளிலும் திருவாவினன்குடி மூன்றாவது தலமாக வழங்குவது காண்க.

4. வாயு தலம்

திருக்காளத்தியை வாயு தலம் எனவும், அங்குப் பெருமான் சன்னிதியில் கர்ப்பக்கிருகத்தில் திருவிளக்கு அசைந்துகொண்டே இருப்பது இதற்குச் சான்று என்பதும் முன்னரே கூறினோம். இந்தச் சிறப்பைப் போலவே திருவேரகம் என்ற தலமும் அமைந்திருப்பது காணலாம். "செழுமகுட நாகம் வைத்த, அரவுபுனை வேணிவைத்த சிவனார் மனங்குளிர உபதேச மந்திரம் இரு செவி மீதிலும்பகர் செய் குருநாதனாகிய ஏரகநாயகன் அன்றருளிய உபதேச ஒலி, இன்றும் சுவாமிமலை குமரகுருபரனது மூலஸ்தானத்தில் மாறாது ஒலிக்கிறதாக ஆன்றோர்கள் உரைக்கின்றனர்.

திருக்காளத்தி தக்ஷிண கயிலாயம் என்று கூறப்படுகிறது. திருவேரகமும் தக்ஷிண கயிலாயமே ஆம். திருமுருகனிடம் பிரணவப் பொருளை உபதேசம் கேட்கப் புகுந்த சடைப் பரமர், தமது சிவகணத் தலைவர்களின் மூலமாய் திருக்கயிலாசத்தின் கொடுமுடி ஒன்றைக் கொணர்ந்து திருவேரகத்தில் விலை விற்கச் செய்தனர் என்று திருவேரகமான்மிய சங்கிரகம் கூறுகிறது. அருணகிரிப் பெருந்தகையார்,

"கொடுமுடி யாய்வளர்ந்து புயனிலை போலுயர்ந்த
குருமலை மீதமர்ந்த—பெருமாளே"

என்ற திருவாக்கால் குறிக்கிறார். எனவே, திருவேரகமான சுவாமிமலை திருக்கயிலையே என்க. சுவாமி என்பது சிவனாருக்கு ஒரு திருநாமம். அப்பெருமானுக்கு நாதனாய் (குருநாதனாய்) உள்ள முருகபிரானுக்குச் சுவாமிநாதன் என்ற திருநாமம் வழங்குவது காணலாம். சுவாமியான சிவனார் மட்டும் எழுந்தருளியுள்ள திருக்காளத்தியைத் தென்கயிலாயமென்னும்போது, சுவாமிநாதனாகிய முருகவேள் குரு

பூஇறைத்து நின்னைப் புகழ்ந்து பணியாதார்
பாவத் திரளகலப் படுமோ சதாசிவமே

சீட சம்பிரதாயத்தை விளக்கி நிற்கும் தலமான திருவே ரத்தை அதற்குச் சமமாகக் கூறுவது பொருத்தமல்லவா!

5. ஆகாயத் தலம்·

ஐந்தாவது பூதத் தலம் என்று ஞானுகாசத் தலம் சிதம்பரத்தைக் கூறுவது போலவே பழமுதிர் சோலையைக் கூறலாம். (1) பஞ்ச பூதத் தலத்தில் கடைசியானது சிதம் பரம். ஆறு திருப்பதிகளில் கடைசியானது பழமுதிர் சோலை. (2) "பாம்புருவான முனி, வாம்புலியான பதன் ஏய்ந்தெதிர் காண நட"மிடும் நடராஜர் பதியாவது சிதம் பரம். அதாவது புலி முனிவர் பாம்பு முனிவர் காணுமாறு ஞான நடனம் செய்யும் ஆனந்தக் கூத்தரது அற்புத பதி சிதம்பரம். அது போலவே திருமாலும் பிரமனும் கண்டு தெரிதற்கரிய ஞான நடனம் தரிசிக்க விரும்பி,

"நாரணனும் வேதன்முன்பு தெரியாத
ஞானநடமே புரிந்து—வருவாயே"

என்ற அருணகிரிநாத சுவாமிகள் வேண்டுகோளை அங்கீ கரித்தருளிய அறுமுகப் பெருமான் அழகிய மயில் ஏறி அரிய நடனம் கொண்டருளினர். அத்தகைய நடன அநு பவத்தை,

"பரமேசர்—பணிய அருள்சிவ மயத்தைக் காட்டு
குமர! குலமலை உயர்த்திக் காட்டு
பரிவொடு அணிமயில் நடத்திக் காட்டு—பெருமாளே"

என்றும், குகவேள் மயில் மிசை நடிக்கும் சுவாமி ஆதலால், அவர் நடனம் செய்யும்போது அவரது சித்ர சிகண்டியான மயிலும் சதிமுறை தவருது ஆடியது என்பதனை,

"செககணசேகு தகுதிமிதோ தி திமியெனஆடு
—மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசைமேவு
—பெருமாளே"

என்றும், ஆடுகின்ற அணி மயிலின் திருவுருவில் ஞானிகள் தேடுகின்ற (பிரணவத்) திருமந்திரத் திருவுருக் கண்டு

மந்திரத்தினல் அலகை மாறுவது போலுமுனைச்
சிந்தைபெறத் துன்பமெலாம் தீரும் சதாசிவமே

இதனை முன்பே அறியாமல் அந்தோ பல காலம் அழிந்தொழிந்ததே என்று அலறும் குறிப்பால்,

> "ஆனதனி மந்த்ர ரூப நிலைகொண்டது
> ஆடுமயி லென்பது—அறியேனே"

என்றும் வரும் பலப்பல பாக்களால் அருணகிரியாருக்குத் திருநடன தெரிசனம் தந்தவிதம் அறிவிக்கப்பட்டது. இதன் சிறப்பை,

> "அரிதுயில் சயன வியாள மூர்த்தனும்
> அணிதிகழ் மிகுபுலியூர் வியாக்ரனும்
> அரிதென முறைமுறை ஆடல்காட்டிய
> —பெருமாளே"

என்ற திருப்புகழ் சிறக்கப் பேசுகிறது.

தொகுப்புரை. மேற் போந்தவற்றிலிருந்து ஐம்முகச் சிவனார் எழுந்தருளிய ஐம்பூதத் தலங்களான காஞ்சி, ஆனைக்கா, அண்ணாமலை, காளத்தி, சிதம்பரம் போலவே அறுமுகச் சிவனார் எழுந்தருளிய பரங்கிரி, செந்தில், பழநி, ஏரகம், பழமுதிர்சோலையும் ஐம்பூதத் தலங்களாய் உரைக்கும் சிறப்புக்கள் எல்லாம் அமைய உள்ளன என்று அறிந்தோம். (தொடரும்.)

குறிப்பு:—இந்த ஆராய்ச்சிப் பகுதிக்குத் துணையாக இருந்தது வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகளது அருமந்த சீடர் திருப்புகழடிமை திரு. கா. ரா. முருகேச பிள்ளையவர்களது "திருப்புகழ்—பஞ்ச பூத தலம்" என்ற கட்டுரையாகும். எமது நன்றி அவர்களுக்கு என்றும் உரித்து.

ஸ்ரீ தேவி தாஸர்கள் 13

அபிராமி பட்டர்

(ஸ்ரீரஸபதி)

உயிர்களையும் பயிர்களையும் ஊட்டுகிறது காவிரி. பொலிவு தரும் அந்நதியால், சோழநாடு, பொன்னி நாடு எனப் பெறும்.

பொருத்தழிய விட்டுவிடும் பூட்டுப்போல் உன்பாதம்
கருத்திருத்தக் கன்மவினை கழலும் சதாசிவமே

அந்நாட்டின் ஒரு பகுதி, திருக் கடவூர். சிவபெருமான் வீரம் வெளிப்பட்ட எட்டுத் தலங்களுள், அது ஒன்று. யமனை அடக்கி, அன்பனைக் காத்த அமலன், வீராவேசத்துடன் இன்றும் அங்கு விளங்குகிறான். கண் பெற்ற பயனாக, அத் தெய்வப் பெருமான் திருவுருவை, பார்த்து மகிழ்ந்தவர்களே பாக்கியசாலிகள.

வைதிக வேதியா பலர் அங்கு வாழுகின்றார். பாண்டிநாட்டு அந்தணர் பலர், குணம் சிறந்தார் வாழும் அப்பதியில் குடியேறி னர். திருக்கடவூா அபிராமியை, தினமும் அவர்கள் வழிபடுகின் றனர். பரம அவர்தம் பக்தி கண்ட பரசிவை, அவாகட்குப் பட் டர் என்ற பட்டம் அளித்தனள். (பரந்தாமன் அடியா சிலர்க்கும், பட்டர் என்ற பட்டம் உண்டு.)

அவர்களுள், பக்தி வெள்ளத்தில் மிதந்தவர் ஒரு பட்டர். பொன்னிற மேனி களையான முகம், சுறுசுறுப்பான அறிவை யுடையவர் அவர். இளம் பருவம் முதல், ஏதோ ஒரு சக்தி, அவருள் செயல் செய்துகொணடே யிருந்தது. கலைஞானம் கைவந்த அவ ருடைய வாக்கில் இருந்தது வளம். வடமொழி அறிவு வளர்நதது. தமிழில் தேர்ச்சி தழைத்தது.

அக்காலததில், சரபோஜி மன்னர், தஞ்சையை ஆண்டார். அவர் சபையில், பட்டர்க்குப் பஞ்சாங்கம் பார்க்கும் உத்யோகம். காலையில் எழுவது. கடனை முடிப்பது. நீராடுவது. நீறணிவது. சிறிது நேரம் தேவி பூஜை. அதன் பின் பஞ்சாங்க ஆராய்ச்சி.

ஒவ்வொரு மாதத்தும் வரும் திதி, நட்சத்திரம், வாரம், கரணம் யோகம் ஐந்தையும் எழுதல் அரண்மனைக்குச் செலலல். அதை, நிர்வாகிகளிடம் அளிததல். திருக்கடவூர் திரும்புதல். பொழுது இப் படியே போகிறது

கைமேல பலன் தரும் இவ்வாழ்க்கையில், வரவர மனம் கசந்தது. சீ, இப்படியும் ஒரு வாழ்க்கையா? உத்யோகம் புருஷ லட்சணம். இது உண்மைதான். வயிறறு அளவிற்குத தேவை தான். இரை தேடுவதுடன், இறைவனையும் தேட வேண்டாமோ! கிராமங்களில் சநதை கூடும்; அங்கு ஒரே ஆரவாரம்; கிராமங்கள் தானு? எங்கும்தான், புண்ணியம் இல்லாத கலகல சலசல. இன் றைய வாழ்க்கையில், பெரும்பான்மை எந்தக் குடும்பத்திலும், வளவள செய்தியே வளர்கிறது. சததச் சநதையான உலகத்தில், சாந்தம் காண முடியுமா? அதற்கு வேண்டுவது அமைதி யல்லவா!

கள்ள வாரணு! ஆரண மூர்த்தி! கணபதி! அமைதிதா! மோனம்தா என்று, தல விநாயகரான கள்ள வாரணப் பிள்ளை யார்மேல், பதிகம் ஒன்று பாடி வேண்டினர்.

கதிர்காணப் பனியோடும் காரணம்போல் உன்னையுள்ளம்
அதுகாண மாயை அகலும் சதாசிவமே

ஒப்பாரும் இல்லாத அப்பா! அமிர்த கடேசா! சாந்தம் தா சங்கரா என்று, அமுத கடேசா பதிகம் ஒன்றும் பாடினார். பிறவி நோய் தீர்க்கும் பேறு நேருமுன், மரணம் வந்தால் என்ன செய்வது? அதை எண்ணி வருந்தியது மனம்.

அன்றயன்மால் காணா அடிமுடியைக் காண்பதற்குத்
தென்திசைக்கோன் என்னதவம் செய்தானோ—வென்றிதிகழ்
ஆடரவானா! நீறணிந்தோனா! ஆதிரைநாதா! மாதுமணாளா!
தோடவிர்காதா மாகடவூரா சொல்!
மேகம் கவிந்ததுபோல் மேலெழுந்த காலனைக்கண்(டு)
ஆகம் தளர்ந்துநெஞ்சம் அஞ்சாமுன்—மாகடவூர்ப்
பூதநாதா! வேதகீதா! பூமிதாதா தேடுபோதா!
மாதுபாகா! காலகாலா! வா!

என்று காலசம்மாரப் பின்முடுகு வெண்பா நூல் ஒன்றும் பாடினார்.

தாயான தேவி! அபிராமீ! நான் உன் சேய் அல்லவா! அம்பா! இந்த அடிமையை ஆண்டு கொள்! ஆன்மாவில் உன் அருள் முத்திரைவை! அதன்பின், பிறப்பை யளிப்பான் பின் வாங்குவான்; இறப்பை யளிப்பான் எதிர் நில்லான். அருள்க தேவி! தேவி! இன்னணம் அழுது கதறினார். நலம் சிறந்த இச்செயல், பல நாளாக நடைபெறுகின்றது.

அதன் பயனாக, ஆகாமிய வினை அழிந்தது. மாசு அகன்றது மனம். தேசுற்றது தேகம். உள்ளத்தில மெய்ஞ்ஞானம் உதயம் செய்தது. அதன் பின், உள்ளத்தில் அபிராமி உறவு வளர்ந்தது. ஆற்றின் அலைகளிலும், காற்றிலும், உமா அஆ! உமா அஆ எனும் மோகன கீதம். முழுமதியின் நிலவு, புனித தேவியின் புன்னகை. காணும் கண்கட்கு, எப்பொருளிலும் இப்படிக் காட்சியாயினள் யாமளை. கேட்கும் ஒலிகள் எல்லாம், தேவி கீதம் ஆயின.

அன்பும் அமைதியும் விரும்பிய அவர், முதல்வியின் அருள் மணத்தையே எதனிலும் மோந்து கொள்கிறார். வாய் தேவியை வாழ்த்துகிறது. ஆம். என்ன அருமையான செய்தி!

ஒருநாள், இருந்தாற்போல் இருந்து, திடீர் என்று எழுந்தார். அபிராமீ! அபிராமீ என்று அலறினார். புனித மழையைக் கண்கள் பொழிந்தன. அண்மையில் இருந்தவர் அதிர்ந்தனர். அவரை அணுகவும் அஞ்சினர்.

மற்றொரு நாள். உணவை இல்லத்தில் உண்கிறார். இடையில் திடீரென்று எழுந்தார். அபிராமீ! அபிராமீ! என்று வீறிட்டார்.

முகில்காண மயிலாடும் முறைபோல நின்பாத
யுகம்காணக் கூத்தாடும் உள்ளம் சதாசிவமே

அந்த ஓங்காரி சந்நிதி நோக்கி ஓடினார் விஷயம் எவர்க்கும் விளங்கவில்லை. வரவர, இதே நிலை வளர்ந்தது. பார்த்தவர் இது கண்டு பயப்படல் ஆயினர். அம்மை அவர்க்கு எதை யெதை அறிவிக்கிறாளோ? அந்த ஆனந்தாதிசயம் இது என்பதை, ஏழை இதயங்கள் எப்படி அறியும்?

இறைச்சியும் மதுவும், இறைவிக்கு நிவேதிக்கும் வாம மார்க்கியோ இவர்? அந்தப் போதையால்தான், இப்படி யெல்லாம் ஆடுகிறாரோ என்றும் ஐயம் கொண்டனர். வைதிகர் இதனால் வசை பாடினர். அவைதிகர்கள் கை தட்டி நகைத்தனர். அவரை அணுகலாம் பயனை அடையலாம் இஷ்டம் இல்லையேல், அவர் போக்கு அது என்று, சும்மா இருக்கலாம். இரண்டும் இன்றி, ஏளனம் செய்யும் இவர்களை எப்படிச் சகிப்பது? அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து இருக்கும் பட்டர் செவியில், ஏளன வார்த்தைகள் ஏறுவது இல்லை. புலன் கடந்த பெருவெளியில் இருப்பவர்க்கு, இகழ்ச்சியும் புகழ்ச்சியும் ஒன்றுதான்.

வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்பார்க்குப்
பட்டயம் ஏதுக்கடி—குதம்பாய்!
பட்டயம் ஏதுக்கடி!

என்ற பாடல், இங்கு நம் நினைவிற்கு வருகிறது அல்லவா!

அழிவு செய்வதில் பலர்க்கு ஆசை. என்ன செய்வது? உலக ஜாதகத்தில், இப்படியும் ஒரு பகுதி இருக்கத்தான் செய்கிறது. அந்தஸ்துள்ள சிலர், அரசரை அணுகினர்.

மன்னர் பெருமா! பட்டர் செய்தி எப்படி?

மிகவும் நல்லவர் கடமையில் கண்ணும் கருத்தும் உடையவர். ஏன் கேட்கிறீர்கள்? என்ன செய்தி?

பழைய நிலையில், அவரைப் பார்க்கிறீர்கள்! அவர் இன்று மதுபானி. இறைச்சிப் பிரியர்.

பொய்! பெரும் பொய்!

அரசே! அவரை நேரே கண் காணித்த பின், எங்கள் வார்த்தைகளை மறுப்பது நலம்!

போதும் நீங்கள் சொன்னது! போகலாம்! போகலாம்!! என்று ஆத்திரத்தோடு அவர்களை அனுப்பிய அரசர் குலமந்த உள்ளமும், சிறிது குறு குறுத்தது

நாள்கள் சில இடையில் நடந்தன. நாளை தை அமாவாசை. காவலர் கடலில்நீராட, காவிரிப்பூம் பட்டினத்திற்குப் புறப்பட்டார்.

தன்பெருமை வாயாரச் சாற்றுகின்றார் இவ்வுலகில்
உன்பெருமை யிங்கறிவார் உண்டோ சதாசிவமே

இடை வழியில், கடலூர் நாதரைச் சேவிக்கக் கருதினார். அங்கு வந்தார். பரசிவை கோயிலில், பட்டர் இருக்கிறார். இதயத்தில் தேவி மந்திரம். தன்னந்தனி யிருந்த அவர், இன்ப அருள பேரலையில் இருக்கிறா. அதனால், எதிர் நிற்கும் அரசை அறிந்திலர். வரவேற்பும் செய்திலர்.

ஊரார் உரைத்தது உண்மை தானா? ஐயம் பிறந்தது அரசர்க்கு. பட்டர், அபிராமியின் கனிந்த முகமே காண்கிறார். அந்த இன்ப வெள்ளத்தில் மிதக்கிறார். அதை உணர்ந்திலர் அரசர்.

பட்டரே! நாளை என்ன திதி?

சுத்த பௌர்ணமி ஆயிற்றே! என்று, பளிச்சென்று பிறந்தது பதில். அதன் பின்,

ஓங்காரி யென்பாள அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறததை யுடையாள
ஆங்காரி யாகி ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரி யாகி இனிதிருந்தாளே?

என்ற திருமந்திரத்தை மன்னம் செய்கிறது அவர் மனம். ஒளி கண்ட அவர் மன நிலையை, இருள் கண்ட இதயத்தார் அறிய இயலுமா?

அண்மையில் இருந்தாரை அரசர் நோக்கினார். அவர்கள் கை கட்டி வாய் பொத்தி, நகைப்பதையும் கண்டார். ஆத்திரம் அதிகரித்தது நாளை பௌர்ணமி என்கிறார். காதால் கேட்ட சாட்சிகள நீங்கள். நாளை மாலை சூரியன் அஸ்தமித்ததும், பூர்ண சந்திர உதயம் எவர்க்கும் புலனாக வேண்டும். இன்றேல, இவர் தலை நிலத்தில் உருளும்! அந்தணரைக் கொல்வது ஆகாது; எனினும், அந்தணர் குலத்திற்கு, இவரால் களங்கம் வருவதைச சகிக்க மாட்டேன்! இது நிச்சயம்!

அரசர் கோபக்குரல், ஆலயத்தில் பயங்கரமாக எதிரொலித்தது. அவரிடம் கலகம் செய்தவர் மனமும் அதிர்ந்தது

அந்த அதிர்ச்சியில், உள்ளம் வெளி உலகை உணர்ந்தது. அரசர் உறுத்து நோக்கி விரைந்து செல்வதை, பட்டர் அறிந்தார், இங்கு என்ன நடந்தது என்று, அங்கு இருந்தவரைக் கேட்டார். அவர்கள, நடந்ததை வருந்தி உரைத்தனர்.

அப்படியா! சரி. மன்னர் வாளால் மோதுமுன், தேவி புகழை ஓதுவம். மதிமுக அம்பிகை, கனிவொடு மதியைக் காட்டுவள். வாளா இருந்தாளாயின், அரசர் கொன்றார் என்ற பழியில்

அந்தமற்ற நின்னையறிந் தடியேன் அடங்கிமனச்
சிந்தையற்று நின்றுதொழத் தெரியேன் சதாசிவமே

லாமல், உலகம் அறிய, நம் உயிரை நாமே போக்கிக் கொள்வோம். ஆம், அதுதான் நலம் என்று தீர்மானித்தது இதயம்.

ஊரார் எல்லாம், இது குறித்துக் கூடிக் கூடிப் பேசுகிறார்கள். கொந்தளிக்கிறது பக்தர்கள் இதயம். குமுறி அழுகிறது குடும்பம்.

பார்த்திபர்க்கு, அப்படிப் பதில் சொல்ல வைத்தவள் அந்தப் பராசிவைதான். 'அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை'; வந்த இச்சம்பவத்திற்கு நாம் ஏன் வருந்துவது? ஆகிறபடியே எதுவும் ஆகும் என்று, பட்டர் இதயம் ஆறுதல் அடைந்தது.

மறுநாள் காலை. சூரியன் உதயம் ஆயினான். பட்டர் கடனை முடித்தார். நீராடி அநுட்டித்தார். அபிராமியின் ஆலயத்தை அடைந்தார். விழ்ந்து வணங்கினார்.

அம்பா! அம்பிகே! ஆக்குவாய் உலகை! அளிப்பாயும் நீயே! வாழ்க தேவி! உன் அருள் வளம் என்று வாழ்த்தினார். வெளியில் வந்தார். சந்நிதி எதிரில, குறித்த ஒரு இடத்தில் குழி தோண்டினார். அந்தக் குழியின் நாற்புறத்தும், நான்கு இரும்புக் கம்பங்கள் நட்டார்; அதன் உச்சியில் இரும்புக் கம்பிகளால், நாற்புறத்தும் நாற் சதுரம் தோன்ற, விட்டம் கட்டினார். நூறு கயிறுகளை, விட்டங்களில் சுற்றித் தொங்க விட்டார். அவைகளின் மற்றொரு முனையை உறியாகப் பின்னினார். ஏராளமான கட்டைகளை, குழியில் இட்டார். சமித்துகளைச் சொரிந்தார். நெருப்பை மூட்டினார்; நெய் சொரிந்தார். திகு திகு என்று எழுந்தது தீ. இருந்த உறிமேல் ஏறினார். அம்பிகை என அன்னை. பயனை அருளைப் பாலிப்பாள். இன்றேல, பரவிய தீயில் பாய்வேன் என்று சங்கற்பித்தார். பரம தேவி! என்று, விறிட்டுப் பாட ஆரம்பித்தார்.

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி, என்றன் விழுத்துணையே!

என்று பரிவு தோன்றப் பாடினார். உறியின் நூறு கயிறுகளுள். ஒன்றை அறுத்தார். மேலும் பாடுகிறார். பாடிக்கொண்டேயிருக்கிறார். ஒவ்வொரு பாடல் முடிந்ததும், ஒவ்வொரு கயிறாக அறுத்துக் கொண்டேயிருக்கிறார். உறிக் கயிறு, குறைந்து கொண்டே வருகிறது. ஐயோ! இறுதியில், எரிகிற தீயில் விழுந்து விடுவாரோ என்று, அதிர்கிறது நமது இதயம்!

ததியுறு மத்தில் சுழலும்என் ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய்! கமலாலயனும்,

நல்லாரை அண்டியவர் நன்மொழிகள் கேட்டறியேன்
சொல்லாத சொல்லதனைச் சொல்வாய் சதாசிவமே

மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கி, என்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே!

பட்டென்று அறுந்தது ஒரு கயிறு. ஐயோ! என்ன ஆகுமோ?

வெளிநின்ற நின்திரு மேனியைப பார்த(து,) என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட(து) இல்லை; கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற(து,) என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள், ஒன்பதும் மேவி உறைபவளே!

அமாவாசை தர்ப்பணத்தில் சிந்தை செலுத்தி யிருந்த ஊரார், விவரம் உணர்ந்தனர். ஓடிவந்தனர். பட்டர் நிலையைப் பார்த்தனர். படபடத்தனர். அந்நிலையில் இருந்து, அவரை அகற்ற எண்ணினர்.

அவரைத் தடுக்க வேண்டாம்! அம்பிகை அருளட்டும்! இல்லையானால், அரசரால் தலை யறுபடுவதைவிட, கலகம் செய்வர் களிப்படைய, சாம்பவி சந்நிதியில் அவர் சாகட்டும் என்று, ஓ ஓ ஓவென்று அன்பர்கள் கதறி அழுதனர்.

ஒன்றுமே தோன்றவில்லை. கண்ட யாவரும், கண்ணீர் பெருக்கும் காட்சியை நினைக்கிற போதே, நெஞ்சு வெடித்து விடும்போல் இருக்கிறதே!

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை; பதம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை யெல்லாம், நின் அருள் புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின் அருளை, ஏதென்று சொல்லுவதே?

பட்டர் மேலும் மேலும் பாடிக்கொண்டே யிருக்கிறார்.

அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய், கொண்டது அல்ல என்கை
நன்றே உனக்கு? நான் என் செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை நின் திருவுளமே;
ஒன்றே! பலஉருவே! அருவே! என் உமையவளே!

நான் ஒரு லௌகிகன். உன் கோயிலைச் சுற்றினேன்; அதை ஒரு பொருட்டாக்கி, என்முன் ஒருநாள் எழுந்தருளினை! அம்மா! அன்று நீ செய்த பேரருளை, என்னால் மறக்க முடியவில்லையே, தாயே!

ஆசைக் கடலில் அகப்பட்டு, அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் பட இருந்தேனை, நின் பாதம் என்னும்

காவியலட் சணமறியேன் கவிபாடி நின்றன்னைப்
பாவித்தேன் நின்கருணை பாராய் சதாசிவமே

வாசக் கமலம் தலைமேல் வலிய வைத்(து,) ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன், ஈசர் பாகத்த நேரிழையே!

பாடுகிறார்; கயிறு ஒவ்வொன்றாக அறுந்துகொண்டே இருக்கிறது.

''இழைக்கும் வினைவழியே, அடும்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய்!''

என்னை ஏற்க மாட்டாயா? இரக்கம் காட்ட மாட்டாயா? ஆனாலும் தப்பில்லை; தாயே! நீ என்னை

"மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்
துவனே!"

அடாடா! 78 பாடல்கள் முடிந்தன; 78 கயிறுகளும் அறுந்தன.

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு; வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு; அவ் வழிகிடக்க,
பழிக்கே சுழன்று, வெம் பாவங்களே செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோ(டு,) என்ன கூட்(டு)
இனியே!

எனும் 79-ஆம் பாடல் முடிந்தது. மாலை மணி ஆறு. அதன் மேலும் பொறுத்திலள் எம் அன்னை. அதோ! அதோ! ஒரு ஜோதி வெள்ளம்! அதன் நடுவில், அபயவரத கரம் காட்டுகின்றாள் அபிராமி.

ஆ! ஹா! வந்தாயா தேவீ! எரிந்து போவேன் தீயில் என்று எண்ணினேன்! இன்னும் உலகில் இரு! என்று அருள வந்தாயா தாயே! இனி,

அச்சம் இல்லை! அச்சம் இல்லை! அச்சம் என்பது இல்லையே! என்று ஆவேசக் குரல் கொடுத்தார். அவ்வளவில், காட்சி தந்த ஜோதித் திருவுருவம் கரந்தது. காட்சி தந்த திசை நோக்கிக் கரம் குவித்தார் பட்டர். கிளர்ச்சி தந்த அந்தத் தேவியின் சேவை, பட்டர் தவிர வேறு எவர்க்கும் கிட்டவில்லை இப்படியும் ஒரு நாடகமா! எம்பெருமாட்டி!

கூட்டியவா என்னைத் தன் அடியாரில்; கொடியவினை
ஓட்டியவா; என்கண் ஓடியவா; தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா; கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா;
ஆட்டியவா நடம்; ஆடகத் தாமரை ஆரணங்கே!

எனும் 80-ஆம் பாடலை, பரிந்து மகிழ்ந்து பாடினார். அப்போதும் ஒரு கயிற்றை அறுத்தார்.

அன்பு முறையறியேன் ஆதியந்தந் தானறியேன்
நின்பரம் என்றே பாடி நின்றேன் சதாசிவமே

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்புவில்லும்,
விழையப் பொருதிறல் வேரியம பாணமும், வெண்ணகையும்,
உழையைப் பொரு கண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்
கின்றதே!

எனும் 100-ஆம் பாடலை முடித்தார். நூறுவது ஆயிற்றையும் அறுக்கத் துணிந்தார் அச்சமயத்தில், அஞ்சாதே என்ற நாதம், ஆகாயத்தில் எழுந்தது. தேவி, தன் திருச் செவியில இருந்த தோட்டைக் கழற்றினள். விண்ணில வீசினள். பூர்வ பட்சப் பிரதமையில், பூரண சந்திரோதயம் என்று, கண்டவர் எல்லாம் கண் மழை பொழிய, பல மதி ஒளி ஒன்று சேர்ந்ததுபோல, விண்ணில் தோடு விளங்கியது.

தமிழ்ப் பாடல் கேட்கும் விருப்பத்தால், தாமதித்தோம் என்ற ஒரு இனிய குரலும் எழுந்தது. அதனுடன், பட்டர் தீயில் விழாதபடி ஏந்திய எம் இறைவி, அவரைத் தீக்கு அப்புறத்தில் இட்டாள். திருவுருக் கரந்தாள.

அன்பர்கள் உளளம் குதுகலித்தது; இதுதான் அருள் விளையாடல் என்று, எழும்பிக் குதித்தனர். ஏமாந்த சோணகிரிகள் சிலர், இது ஒரு இந்திர சாலம் என்றனர். பொழுது விடியும்வரை, விண்ணில் முழுமதி விளங்கியது. இந்திர ஜாலம் ஒரு விநாடிதானே செயல்படும்; தாம் நினைத்தது தவறு என்ற முடிவிற்கு அவர்களும் வந்தனர்.

பட்டரை, போற்றி எல்லோரும் புகழ்ந்தனர். அவர் அதைப் பொருட் படுத்திலர். இந்நூற் பாடலைப், பாராயணம் செய்தால் பயன் உண்டு; இதை உலகிற்கு அறிவிக்க எண்ணினர்.

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை, புவியடங்கக்
காத்தாளை, அங்கையிற் பாசாங் குசமும், கரும்புவில்லும்
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்(கு) ஒரு
தீங்கில்லையே

என்று, நூற் பயனாக ஒரு பாசுரம் பாடினர்.

இரவு 7 மணிக்கே காவலர், மதிமண்டலத்தைக் கண்டார். அவர் மனம் அதிர்ந்தது. அபிராமி, வாழும் தன் அடியர் வாக்கைக் காக்க, இவ்வளம் பரம அருளைப் பாலித்தாள்; அவர் தகுதியை யறியாமல், அவமதித்தோமே என்று அஞ்சினார். விரைந்து புறப் பட்டார். பட்டர் திருவடிகளில பணிந்தார். அடியேன் செய்த

மறையறியேன் பொருளறியேன் மதிசிறியன் நின்னடியேன்
குறையறவே செய்வாய் எம் கோவே சதாசிவமே

அபசாரம் பொறுக்க வேண்டும் என்று, கண்ணீர் பெருக்கிக் கதறினர்.

அரசே! உலகம் அன்னையின் பேரருளை உணர, இப்படி நாடகம் ஒன்று, அவள் அருளாலேயே நடந்தது. வருந்த வேண்டாம் என்று, அவரை பட்டர் ஆசி செய்தார்.

இன்றுமுதல் உலகம், தங்களை அபிராமி பட்டர் என்றே அழைக்கும். அடியேன் காணிக்கையை, ஏற்கவேண்டும் என்று அரசர் வேண்டினர்.

மன்னா! புலத்தை அழிக்கும் நிலம். மருளைத் தரும் பொருள்; எனக்கு அவை ஏன்? அம்மையின் அருள உளது; அதுபோதும் என்று, மன்னர் மகிழ்ந்து தந்தவைகளைப் பட்டர் மறுத்தார்.

தங்கள் சந்ததியார் பொருட்டாயினும், இதை யேற்கவேண்டும் என்று மன்றாடினர் மன்னர். உகந்து பட்டர் உடன் பட்டார். வேலிக்குக் குறுணி நிலம் மான்யம்; சூர்யசந்திரர் உள்ளவரை என்று செப்பேடு செய்தளித்தார் வேந்தர். அந்தச் செப்புப் பட்டயம், இன்றும் அவர் சந்ததியாரிடம் இருக்கிறது.

பட்டர், அதன்பின் முன்னையினும் வழிபாட்டில் மும்முரம் ஆயினர். ஆகமார்த்தமாகவும் ஆராதித்தார். சிறந்த அநுபூதி சித்தித்தது. இவ்வுலகில பலகாலம் இருந்தார். அபிராமியின் திருவடி நிழலில், இன்றும் இன்பம் கொண்டு இருக்கின்றார். அபிராமி அந்தாதி, அவர் காலந்தொடங்கி, பல பக்தர்கட்குப் பாராயண நூலாக இருக்கிறது. உரிய பயனையும் உதவுகிறது.

முக்கியமான ஒரு செய்தி

திருநெல்வேலித் திருக்கோயில் விளக்கேற்றும் பணியாளர் ஒருவர். அவர், ஒருவர் உபதேசித்த

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்(கு,) அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்(கு) உளவாகிய சின்னங்களே!

எனும் அபிராமி அந்தாதியின் 52-ஆம் பாசுரத்தை, தொடர்ந்து உருவேற்றி யிருந்தார்.

திருநெல்வேலியை யாண்ட மன்னரின் தலைமை அமைச்சர், சிற்றின்பச் சேற்றில் சிக்கி, பண்ணத் தகாத அட்டூழியம் பல பண்ணினர். அதை யறிந்த அரசர், அவர் அதிகார முத்திரையைப் பிடுங்கினர்.

ஆதார நிலையறியேன் அங்கிருக்கும் வகையறியேன்
பூதாதி லயமறியேன் பொய்யேனை ஆளுதியோ

விளக்கேற்றும் பணியாளரை அழைத்தார். அந்த அதிகார முத்திரையை அவர் கையில் அளித்தார். பாசுர பாராயணத்தால் அம்பிகையின் அருள் பெற்றிருந்த அவர்க்கு, அமைச்சர்க்கு வேண்டிய அறிவு நிரம்பியது. அருமையாக நடந்தது ஆட்சி. உருவேற்றிய பாசுரத்தில் உள்ளபடி, நில ஆட்சி; ஏறிச் செலுத்த, பல்லக்கும் குதிரையும் யானையும் பலித்தன. பொன்னணியும், முததாரமும் அவரில் பளபளத்தன.

ஒரு பாசுரத்தை உருவேற்றிய பயன் இதுவெனில், இதய பூர்வமாக, அபிராமி அந்தாதியை, முழுதும் பாராயணம் செய்தவர் அடையும் பயனைப் பகர ஒண்ணுமோ?

வாழ்க தேவிதாசர்கள்!

ஓம்

அட்டைப்பட விளக்கம்

பாண்டியன் வெப்பு நீங்கல்

(கி. வா. ஜ.)

சோழ நாட்டிலிருந்து சைவ அந்தணர் ஒருவர் தொண்டர்களுடன் வந்திருக்கிறார் என்பதைக் கேட்ட சமணர்கள் முணுமுணுக்கத் தொடங்கினர். அரசனிடம் போய், "நம்மோடு வாது செய்யும்பொருட்டுச் சிவனை வணங்கும் சைவ வேதியர் ஒருவர் தம் கூட்டத்தோடு வந்திருக்கிறார். அவர்களைக் கண்டதனால் நாங்கள் தூய்மையை இழந்தோம்" என்று கூறினர். அது கேட்ட மன்னன், "நான் இச்செய்தியைக் கேட்டதனால் தூய்மையை இழந்தேன். அவன் இங்கே எதற்கு வந்தான்? நான் என் செய்வது?" என்று கேட்டான். சமண அடிகள், "நம் சமயத்தின் ஆற்றலை அவர்கள் உணரும்படி மந்திரம் செய்து அவர்கள் தங்கியிருக்கும் மடத்தில் தீப்பற்றும்படிச் செய்யலாம். அது கண்டு அஞ்சி அவர்கள் ஓடிப் போவார்கள்" என்று சொல்ல, மன்னவன் அவ்வாறே செய்க என்றான்.

சமணர்கள் உடனே மந்திரங்கள் உச்சரித்துச் சம்பந்தப் பெருமான் தங்கிய மடத்தில் தீயைப் பற்றச்

எடுத்திட்ட இப்பிறவி இதுவுமழி யாதபடி
தடுத்து (அ)பயம் தந்தருள்வாய் சரண் நீ சதாசிவமே

செய்ய முயன்றனர். அவர்கள் மந்திரம் பலிக்கவில்லை. இறைவன் அருள் பெற்றவர்பால் அது எவ்வாறு பலிக்கும்? தம் முயற்சி தோற்றது கண்டு கலங்கிய சமணர்கள், "நமக்கு ஏதோ போதாத காலம் வந்துவிட்டது" என்று துணுக்குற்றார்கள். "மந்திரத்தால் சாதிக்க இயலாததை இனித் தந்திரத்தால் முடிக்க வேண்டும்" என்று எண்ணி மறைவாக ஒருவனை ஏவி மடத்தில் தீயிடச் செய்தார்கள். அவ்வாறே இரவில் யாரும் அறியாமல் அவன் செய்தான். ஆயினும் மடத்தில் தீ மூண்டதை அடியார்கள் கண்டு கொண்டார்கள். அதை அவித்துவிட்டு ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு அறிவித்தார்கள். "சிவனடியார்கள் தங்கி யிருக்கும் இவ்விடத்திற்கா தீ வைத்தார்கள்?" என்று பதறி, "அரசன் முறை வழுவியதனால் வந்தது இது" என்று கூறி, ஆலவாய் எம்பெருமானைத் தியானித்து,

"செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்சல் என்றருள் செய்எனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியர்க் காகவே"

என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அரசனுடைய தேவியாராகிய மங்கையர்க்கரசியா ருடைய மங்கல வாழ்வு கருதியும், குலச்சிறையாருக்கு அரசன்பா லுள்ள அன்பை எண்ணியும், இப்போது தவறு செய்தா லும் மீண்டும் மன்னன் சிவநெறியிலே புகும் வாய்ப்பு இருப்பதை நினைந்தும் இப்பாசுரத்தில், "பையவே சென்று பாண்டியர்க் காகவே" என்று திருவாய் மலர்ந்தார் பெருமான்.

உடனே பாண்டியனுக்கு வெப்பு நோய் பற்றிக் கொண்டது. அதனைக் கேட்ட மங்கையர்க்கரசியார் அரசனை அணுகிப் பதைபதைத்து நின்றார். குலச்சிறை யாரும் வந்து வருத்தம் மிக நின்றார். வெப்பு நோயை நீக்க மருந்துகள் கொடுக்கச் செய்தனர். அது குறையவில்லை. இந்தச் செய்தி கேட்ட சமணர்கள், தாம் முதல் நாள் செய்த தீங்கின் விளைவு அது என்பதை உணர்ந்து நடுங்கினர். ஆயினும் அக்கருத்தை வெளிக்காட்டாமல்

அரசனைச் சூழ்ந்தனர். தம்முடைய மயிற்பீலியையும் பிரம்புகளையும எடுத்து மந்திரம் கூறித் தடவினர். அதனால் வெப்பு மிகுதியாயிற்றே யன்றிக் குறையவில்லை. பீலியும் பிரம்பும் கரிந்தன,

அப்போது அரசன் மிக்க சினம் மூண்டு, ''நீங்கள் யாவரும் இங்கே நிற்க வேண்டாம்'' என்று கூற, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அரசனை அணுகி, "சீகாழிப்பிள்ளையார் இங்கே வந்திருப்பது தெரிந்து சமணர்கள் செய்த தீங்கினால் விளைந்தது இது என்று தோன்றுகிறது. இதனை அந்தப் பிள்ளையார் அருளால் தான் தீர்க்க வேண்டும். சமணர்கள் செய்யும் செயல்கள் இதனை வளர்க்குமேயன்றிக் குறையச் செய்யா. ஞான சம்பந்தரை வருவித்தால் இந்தப் பிணி தீரும்'' என்று சொன்னார்கள். ஞானசம்பந்தர் திருநாமம் காதில் விழுந்த போதே சிறிது உணர்வு வரப் பெற்ற மன்னன், "அந்தப் பெருமானால் நோய் தீருமென்றால் அதையும் பார்ப்பேன். யார் என் பிணியைத் தீர்த்து வெல்கிறார்களோ அவர்கள் பக்கம் நான் சேர்வேன்'' என்றான்.

அது கேட்டுப் பாண்டிமா தேவியாரும் குலச்சிறையாரும் விரைந்து ஞானசம்பந்தப்பிரான் இருந்த மடத்தை அணுகி அவரை வணங்கி, அரண்மனைக்கு எழுந்தருளி மன்னனுடைய வெப்பை நீக்கி ஆட்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். அப்பெருமான் உடனே திருக்கோயில் சென்று இறைவனை வணங்கி," நின் திருவருள் துணைக்கொண்டு, வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்பவரோடு வாதம் செய்யப் புகுகின்றேன். ஞாலமெல்லாம் நின்புகழே மிகவேண்டும் அதற்கு விடை கொடுத்தருள்க'' என்ற கருத்துடைய திருப்பதிகத்தைப் பாடி இறைவன் அருளால் மனஉறுதி பெற்றுப் பாண்டி டியன் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்.

அவர் வருவதை அறிந்த சமணர்கள் அரசனை அணுகி ''நம்முடைய சமயத்தைப் பாதுகாப்பது நின் கடன். ஆதலால் அவரும் நாங்களும் இந்த நோயைத் தீர்க்கும்படி சொல். அவரால் நோய் தீர்ந்தாலும் நாமும் தீர்த்தோம்

பெருமைபெறு பேரின்பப் பெரும்பாற் கடலேஉன்
அருமையருள் அமுதுணஎன் ஆசை சதாசிவமே

என்று சொல்ல இசைய வேண்டும்" என்றார்கள். அது கேட்ட பாண்டியன், "நான் பொய் சொல்ல மாட்டேன். இரு திறத்தவரும் தீர்க்க முயலுங்கள்" என்றான்.

ஞானசம்பந்தருக்குத் தன் தலைமாட்டில் ஆசனம் அமைக்கச் செய்த அரசன் அவரை எதிர்கொண்டழைக்கும் படி ஏவினான். சம்பந்தர் வரும் செய்தியைச் சொன்ன குலச்சிறையார் அரண்மனை வாயிற்புறம் வந்து பெருமானை எதிர்கொண்டழைத்துச் சென்றார்.

அரண்மனையுட் புகுந்து பாண்டியனுக்கருகே சென்ற போது, பிள்ளையாருடைய திருமேனியைக் காணப் பெற்ற பாண்டியனுக்குச் சற்றே வெப்பு நோய் நீங்கியது போல இருந்தது. "தங்கள் ஊர் எது?" என்று கேட்டான். உடனே பெருமான், "நம் ஊர் சீகாழி" என்று கூறி அதன் பன்னிரு பெயரையும் தெரிவிக்கும் திருப்பதிகம் ஒன்றைப் பாடியருளினார்.

பாண்டியன் திருமுடிப் பக்கத்தில் இருந்த பீடத்தில் எழுந்தருளியிருந்த சம்பந்தப் பெருமானைக் கண்ட சமணர் களுக்குக் கோபம் பொங்கி வந்தது. பலபல வெய்ய சொற் களைச் சொல்லி வாதம் செய்யும்பொருட்டுத் தம்முடைய ஆகமத் துணிவுகளை ஆரவாரமாக எடுத்துப் பேசினார்கள்.

"உங்களுடைய சமண உண்மைகள் என்ன?" என்று பிள்ளையார் கேட்க யாவரும் சேர்ந்து பலவற்றைச் சொல்லத் தொடங்கினார்கள். அது கண்ட மங்கையர்க் கரசியார், "இப்பெருமான் இளையர். இவர்கள் பலர் வலியர். இப்போது தங்கள் நோயை முதலில் இப்பெரு மான் தீர்க்கட்டும். பின்பு இச்சமணர்கள் பேசும் சக்தி யுடையவர்களாக இருந்தால் பேசட்டும்'' என்று கூறினார். பாண்டியன் சமணரைப் பார்த்து, "வேறு வாதம் வேண் டாம். நீரும் இவரும் என் வெப்பு நோயைத் திருங்கள். உங்கள் தெய்வத் தன்மையை என் வாயிலாகக் காட்டுங் கள்' என்றான்.

பிள்ளையார் மங்கையர்க்கரசியாரை நோக்கி, "நான் சிறுபிள்ளையென்று அஞ்ச வேண்டாம். ஆலவாய்ப் பெருமான் திருவருள் வலிமை இருக்கிறது" என்ற பொரு

உன்னைத் தவிரவே றுண்டோ பயனேஉன்
தன்னைப் பெறும்வழிசொல் தஞ்சம் சதாசிவமே

ளமைந்த, "மானினேர் விழி மாதராய்" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். அருகர் ஆரவாரம் செய்தனர்.

பாண்டியன் அவ்விரு சாராரையும் நோக்கி, "இன்று எனக்கு உற்ற பிணியை யார் தீர்க்கிறார்களோ, அவர்களே வாதில் வென்றவராவார்கள்" என்று கூறினான். உடனே சமணர்கள், "நாங்கள் மன்னனின் இடப்பாகத்தில் உள்ள நோயைத் தீர்ப்போம்" என்று சொல்லி மந்திரங் கூறிப் பீலியால் தடவலானார்கள். பிள்ளையார் ஆலவாயப்பனை நினைந்து, "மந்திரமாவது நீறு" என்ற பதிகத்தைப் பாடி வலப்பாகத்தில் திருநீற்றைத் தடவியருளினார். உடனே அப்பகுதி பொய்கை நீரைப் போலக் குளிர்ந்தது. இடப் பகுதியில் வெப்பம் ஏறியதேயன்றிக் குறைந்தபாடில்லை. மன்னவன் அது கண்டு, "இது என்னே! ஒரு பக்கம் நரகமும் ஒரு பக்கம் வீட்டின்பமும் அமைந்தது போலவும், ஒருபால் நஞ்சும் ஒருபால் அமுதமும் அமைந்தது போலவும் என் உடம்பு இருக்கின்றதே" என்று கூறி அருகரை நோக்கி, "கொடிய செயலையுடைய சமணராகிய நீங்கள் தோற்றுப் போனீர்கள்" என்றான். பின்பு சம்பந்தரைப் பார்த்து, "இங்கே எழுந்தருளி என்னை உய்யக்கொண்ட பெருமானே! இந்தப் பக்கத்து நோயையும் நீக்கியருள வேண்டும்" என்று மனமுருகிச் சொன்னான். கருணை மலர்ந்த பெருமான் திருநீற்றை எடுத்து இடப்பாகத்தில் ஒருமுறை தடவவே, அங்கும் வெப்பு நோய் அகன்றது.

மங்கையர்க்கரசியாரும் மந்திரியாரும் பிள்ளையார் திருவடியில் வீழ்ந்து எழுந்து, "நாங்கள் பெருமை பெற்றோம். இன்று புதிய பிறவியை அடைந்தோம். பிறவிப்பிணி நீங்கும் அருட்சிறப்பை மன்னர்பிரான் பெற்றார்" என்று உவகை மீதூரச் சொன்னார்கள்.

தன் உடம்பிலிருந்த வெப்பு நோய் முற்றும் மறைய, இன்பம் எய்திய பாண்டியன் தன் உச்சிமேல் கைகூப்பி, "ஞானசம்பந்தப் பெருமான் பாதம் நண்ணி அடியேன் உய்ந்தேன்" என்றான்.

வினை விளையும் விஷயமெலாம் விட்டகன்று மெய்ஞ்ஞானந்
தனையுணரும் சாந்தம் தருவாய் சதாசிவமே!

THE VEENA OF LIFE

Sage Agastiar described life as a veena and the Lord within as the sweet strains flowing from it. The physical body which at birth becomes ours is a wonderful possession and how we play with it, determines the fate.

"என்னுயிர் வீணையிலே—முருகா
இன்னிசை நீயலவோ
உன்னருள் ஆக்ஷியிலே—முருகா
உள்ளவன் நானலவோ"

The Upanishads advise how to see the God of everywhere. The worlds constitute the Veena and as the master musician's touch brings forth the enchanting strains within the Veena, the touch of the yogi and the bhakta brings out the Lord within the Universe. The world is a **Sahasra Veena.** Even as a Sahasra lingam is made up of a thousand lingams gathered together in the shape of one integrated lingam, the veena of the universe is built of an infinite variety of human or rather life veenas. The All-Life, the life of the Universe and the life of man the individual, are all but one Life. This idea is brought out by the universe being compared to a huge veena, every part of which is also a veena. The whole is the part and the part is the whole. The music of the spheres is the symphony of the varied strains of all the worlds. They all merge in the sound of the one syllable 'AUM' (ஓம்). Consistency of word,

thought and deed with the prosperity and peace of the world is the primordial dharma of man. Love is the one string on which man is destined to play. The strains of love vibration constitute the Bhakti of man to the Lord. Hence love of music takes man but to the antechamber of Bhakti and when music and bhakti combine, the corporeal man becomes the man universal who is *able, as Sri Krishna said, to know God, to see God* and to become one with God. The Lord is the life of life. He is playing on the veena of the living body. The degree of responsiveness of man to the strains of the Great Vainika the Lord, differentiates the Sage and the Bhakta from the rest; for, these alone keep the Veenas of their being ever ready for the elevating and divine expression of the Lord within and without.

—Thiruppugal Mani.

வாயாரப் புகழ்ந்தருளைத் தேடிப் பாடி
வாழ்த்து மன்பர் தாம்வணங்கி வேண்டும் எல்லாம்
தாயான கற்பகம்போல் கொடுத்துக் காட்டும்
தற்பரனே! சங்கரமா தேவே! நின்னை
ஓயாமல் நானடியேன் பாடிப் பாடி
உன்சரணே சரணானேன் மறுபற் றில்லேன்
நீயாதும் அறிவாய்;நின் அன்பர் வாட்டம்
நீத்தகலும் கருணையமு(து) ஊற்றும் தேவே!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீ
நெ. 1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
சிவநேயச் செல்வர்கள் ,,			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the N...